Australian Government
Attorney-General's Department

# கட்டாயத்திருமணத்திற்கான குடிமக்கள் (சிவில்) பாதுகாப்புகளும் பரிகாரங்களும்

ஆலோசனை கட்டுரை

ஜூலை 2024

# நாட்டின் அங்கீகாரம்

*நாங்கள் ஆஸ்திரேலிய நாட்டின் பாரம்பரிய பாதுகாவலர்களை ஏற்றுக்கொள்கிறோம், நிலம், கடல் மற்றும் சமூகத்துடன் அவர்களது தொடர்ச்சியான இணைப்பினை ஏற்றுக்கொள்கிறோம். மக்களுக்கும், கலாசாரத்திற்கும் மற்றும் காலம்சென்ற முதியோருக்கும், தற்போது வாழ்ந்துகொண்டிருப்போருக்கும் மற்றும் இனிமேல் வரவிருப்போருக்கும் நாம் எமது மரியாதையைச் செலுத்துகிறோம்.*


© Commonwealth of Australia 2024

பொதுநலவாய Coat of Arms (மரபுச்சின்னங்கள் பொருந்திய அங்கி)-ஐத் தவிர, இந்த வெளியீட்டில் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து சாதனங்களும், https://creativecommons.org/licenses/by/4.0/legalcode -இல் உள்ள Creative Commons Attribution 4.0 International Public License-இன்கீழ் வழங்கப்படுகிறது.

இதன் அர்த்தம் என்னவென்றால் இந்த உரிமம் (license) இந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டது போல இருக்கும் சாதனங்களுக்கு மாத்திரமே பொருந்தும்

இத்துடன் தொடர்புடைய உரிமத்தின் நிபந்தனைகளின் விபரங்கள் https://creativecommons.org/ as is the full legal code for the CC BY 4.0 license at https://creativecommons.org/licenses/by/4.0/legalcode-இல் இருக்கும் Creative Commons website-எனும் இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

Use of the Coat of Arms

எவ்வித நிபந்தனகைளின்கீழ் இந்த Coat of Arms பயாவிக்கப்படலாாம் என்பது பற்றிய விபரங்கள் பின்வரும் இணையத்தளத்தில் கிடைக்கும்

பிரதம மந்திரி மற்றும் மந்திரிசபை திணைக்கள இணையத்தளம்- https://www.pmc.gov.au/government/commonwealth-coat-arms.

# உள்ளடக்கம்


உதவியும் ஆதரவும் ..... 5

கலைச்சொல் பற்றிய குறிப்பு ..... 5

சமர்ப்பணம் ஒன்றினைத் தயாரித்தல் ..... 6

*மெய்நிகர் ஆய்வு அல்லது எழுத்திலான சமர்ப்பணம்* ..... 6

*பிற கலந்தாலோசனை வழிமுறைகள்* ..... 7

ஆலோசனை காலம் ..... 7

விசாரணைகள் ..... 7

அறிமுகம் ..... 8

கட்டாயத்திருமணம் ..... 9

ஆஸ்திரேலியாவில் கட்டாயத்திருமணத்திற்குத் தற்போதய பிரதிபலிப்பு ..... 10

*ஆதரவு சேவைகள்* ..... 10

பரவல் மற்றும் தரவு ..... 11

*பாதிக்கப்பட்ட-உயிர்பிழைத்தோரின் வயது* ..... 12

வழக்கு எடுத்துக்காட்டுகள் ..... 13

ஆலோசனைக்கான முன்மொழிவுகள் ..... 16

பகுதி1- குடுமப் மற்றும் வீட்டு வன்முறை சேவைக்கான பாதிக்கப்பட்டு-உயிர்பிழைத்தோர் அணுகலை மேம்படுத்துவதற்கு, குடும்ப மற்றும் வீட்டு வன்முறையின் ஒரு வடிவமாக கட்டாயத்திருமணத்தின் பகிரப்பட்ட புரிதலைக் கட்டிவளர்த்தல் ..... 18

தேடிய பதில் ..... 18

சுருக்கம் ..... 18

பின்னூட்டத்திற்கான முன்மொழிவு ..... 19

பகுதி 2 – கால்வி மற்றும் விழிப்புண்ர்வு--தூண்டலை மேம்படுத்துதல் ..... 21

தேடப்பட்ட பதில்கள் ..... 21

சுருக்கம் ..... 21

பின்னூட்டத்திற்கான முன்மொழிவு ..... 22

பகுதி 3- சிவில் பாதுகாப்புகள் மற்றும் பரிகாரங்களை வலுவூட்டல் ..... 23

தேடப்பட்ட பதில்கள் ..... 23

சுருக்கம் ..... 23

*சிவில் பாதுகாப்புகள் மற்றும் பரிகாரங்கள் என்றால் என்ன?* ..... 23

*என்ன சிவில் பாதுகாப்புகள் தற்போது கிடைக்கும்?* ..... 23

*கட்டாயத்திருமணத்திற்கான உறுதியான பாதுகாப்புகள் மற்றும் பரிகாரங்கள் எங்களுக்கு ஏன் தேவை?* ..... 24

பின்னூட்டத்திற்கான முன்மொழிவு ............ 26
மேம்படுத்தப்பட குடிமக்கள் (சிவில்) பாதுகாப்புகள் மற்றும் பரிகாரங்களை உறுதிசெய்வதற்கான விருப்பதேர்வுகள் ............ 26
மேம்படுத்தப்பட்ட குடிமக்கள் பாதுகாப்புகளும், பரிகாரங்களும்- முக்கிய அம்சங்கள் ............ 30
ஆதரவு தேடுவதில் இருக்கும் அபாயக் காரணிகளும், தடைகளும் ............ 40
சிறுவர்களுக்கு ஆதரவளித்தல் ............ 41
தீர்மானம் ............ 42
ஒருங்கிணைக்கப்பட்ட ஆலோசனை கேள்விகள் ............ 43
*ஆலோசனைக்கான முன்மொழிவுகள்* ............ 43
*பகுதி1: குடும்ப மற்றும் வீட்டு வன்செயல் சேவைகளை, பாதிக்கப்பட்ட- உயிர்பிழைத்தோர் அணுகுவதற்கான வழிகளை மேம்படுத்துவதற்கு, குடும்ப மற்றும் வீட்டு வன்முறையயின் ஒரு வடிவமாகக் கட்டாயத் திருமணம் குறித்த பகிரந்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வுகளைக் கட்டியெழுப்புதல்* ............ 43
*பகுதி 2: கல்வி மற்றும் விழிப்புணர்வு-தூண்டுதலை மேம்படுத்துதல்* ............ 43
*பகுதி3: குடிமக்கள் பாதுகாப்பு மற்றும் பரிகாரங்களை வலுப்படுத்துதல்* ............ 43
*பின்னூட்டத்திற்கான முன்மொழிவு* ............ 43
*கட்டளைகளுக்கான காரணங்கள்* ............ 44
*கட்டளைகளுக்கான வாய்ப்பு* ............ 45
*விண்ணப்பதாரர்கள்* ............ 45
*பிரதிவாதிகள்* ............ 45
*பாதிக்கப்பட்ட- உயிர்பிழைத்தவர் முகவர்* ............ 45
*சட்ட நடவடிக்கைகள் ஊடாக நீதிமன்ற பாதுகாப்புகளும், உதவியும்* ............ 45
*இடைக்கால கட்டளைகள் மற்றும் ஒருதரப்பினர் வழக்குவிசாரணைகள்* ............ 45
*சேவை,* அமுலாக்கல் *மற்றும் முறிவு* ............ 46
*பிற பரிகாரங்கள்* ............ 46
*ஆபத்துக் காரணிகள்* மற்றும் *ஆதரவு* தேடுவதில் தடைகள் ............ 46
*சிறுவர்களுக்கு ஆதரவளித்தல்* ............ 46

# உதவியும் ஆதரவும்

கட்டாயத்திருமணம் என்பது ஒரு சவாலுக்குரிய பிரச்சினையாகும் அத்துடன் சிலருக்கு இந்தக் கட்டுரையை வாசிப்பது வலுவான உணர்வுகளைக் கொண்டுவரலாம்.

உங்களுடைய பாதுகாப்பு, இன்னொரு ஆளின் பாதுகாப்பு, அல்லது ஓர் அவசரநிலை போன்றவை உங்களுக்கு ஏற்பட்டால், தொலைபேசியில் மூன்று பூச்சியத்தை (000) அழைக்கவும்.

நீங்களோ அல்லது உங்களுக்குத் தெரிந்த யாரோஒருவர் கட்டாயத்திருமணத்தில் அல்லது அதன் பயத்தில் இருந்தால், நீங்கள் ஆஸ்திரேலியன் ஃபெடரல் பொலிசுக்கு அறிவிக்கலாம், அல்லது 131 237அழைத்து, அல்லது அவர்களது இணையத்தளத்தினூடாக அல்லது (திங்கள் – வெள்ளி காலை 9 மணியிலிருந்து மாலை 5 மணிவரை, சிட்னி நேரம்) 02 9514 8115-ஐ அழைத்து My Blue Sky – ஐத் தொடர்புகொள்ளலாம் My Blue Sky என்பது, கட்டாயத்திருமணத்தில் இருக்கும் அல்லது திருமணம் செய்யுமாறு கட்டாயப்படுத்துவது குறித்துக் கவலையில் இருக்கும் ஆஸ்திரேலிய மக்களுக்கான தேசிய சேவையாகும்

உதவி மற்றும் ஆதரவ ு போன்றவற்றைப் பின்வரும் சேவைகள்கூட உங்களுக்கு வழங்கலாம்:

- Lifeline (13 11 14) – தேசிய நெருக்கடி ஆதரவுகள் மற்றும் தற்கொலை தடுப்பு சேவைகள் நாளொன்றில் 24 மணி நேரமும், வாரத்தில் 7 நாட்களும் கிடைக்கும்.
- 1800Respect (1800 737 732) - தேசிய பாலியல் தாக்குதல், வீட்டு மற்றும் குடும்ப வன்செயல் தொடர்பான ஆலோசனை சேவை போன்றவை நாளொன்றில் 24 மணி நேரமும், வாரத்தில் 7 நாட்களும் கிடைக்கும்
- 13YARN (13 92 76) என்பது பழங்குடியினர் மற்றும் ரொறெஸ் நீரிணை தீவைச் சேர்ந்தோருக்கான நெருக்கடி ஆதரவு இணைப்பாகும், இது நாளொன்றில் 24 மணி நேரமும், வாரத்தில் 7 நாட்களும் கிடைக்கும்.
- Kids Helpline (1800 55 1800) – ( 5 முதல் 25 வயதுடைய)குழந்தைகளுக்கும், இளைஞர்களுக்குமாக உருவாக்கப்பட்ட தேசிய நெருக்கடி ஆதரவுசேவையை நாளொன்றில் 24 மணி நேரமும் வாரத்தில் 7 நாட்களும் பெற்றுக்கொள்ளலாம்.

## கலைச்சொல் பற்றிய குறிப்பு

கட்டாயத்திருமணத்தை அனுபவித்த ஒரு தனிப்பட்டவர் அல்லது கட்டாயத்திருமணத்திற்குள் பிரவேசிப்பதற்குத் தூண்டுவதற்கான நடத்தையை அனுபவித்தவரை விபரிப்பதற்கு ‘பாதிக்கப்பட்ட-உயிர்பிழைத்தவர்' என்னும் வார்த்தையை இந்த ஆலோசனைக் கட்டுரை பயன்படுத்துகிறது. இந்த வார்த்தையுடன் அடையாளம் காணப்படாத கட்டாயத்திருமணத்தை அனுபவித்த தனிப்பட்டவர்களை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம்.

## சமர்ப்பணம் ஒன்றினைத் தயாரித்தல்

கட்டாயத்திருமணத்தில் அல்லது அதன் ஆபத்தில் இருக்கும் மக்களுக்காகச் சிவில் பாதுகாப்புகளையும், பரிகாரங்களையும் மேம்படுத்துவதற்கு ஒரு மாதிரியின் வளர்ச்சி உட்பட, ஒன்றிணைக்கப்பட்ட தேசிய பிரதிபலிப்பு ஊடாக கட்டாயத்திருமணத்தைச். சமாளிக்க ஆஸ்திரேலிய அரசாங்கத்தின் பணியை அறிவிப்பதற்கு இந்த ஆலோசனை கட்டுரை கருத்துகளை வரவேற்கிறது.

குறிப்பாக, கட்டாயத்திருமணம்செய்து வாழ்ந்த அனுபவத்துடன் இருப்பவர்கள், கட்டாயத்திருமணத்தால் பாதிக்கப்பட்ட சமூகங்கள், சட்டத்தொழில் பார்ப்போர், சேவை வழங்குபவர்கள், முன்னணி பதிலளிப்பவர்கள், சமூகக்குழுக்கள், மற்றும் கல்வித்துறையைச் சார்ந்த அனைத்து சமூக உறுப்பினர்களிடமிருந்தும் அறிந்துகொள்வதில் நாம் ஆர்வமாக இருக்கிறோம்.

### *மெய்நிகர் ஆய்வு அல்லது எழுத்திலான சமர்ப்பணம்*

இந்த ஆலோசனைப் பத்திரத்திற்குப் பதிலாக ஒரு சமர்ப்பணத்தை வழங்குவதற்கு, Commonwealth Attorney-General's Department's Consultation Hub -ஐப் பார்த்து 'Make a submission' என்பதை அழுத்தவும். இந்தப் பத்திரத்தில் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள கலந்தாலோசனக்கேள்விகளுடன் மெய்நிகர் (ஆன்லைன்) கருத்துக்கணிப்பிற்கு உங்களை இது அழைத்துச் செல்லும். ஒவ்வொரு கேள்விகளுக்கும் நீங்கள் பதிலளிக்க வேண்டியதில்லை. உங்களுக்கு அல்லது உங்களுடைய நிறுவனத்திற்குப் பொருத்தமான கேள்விகளுக்கு மாத்திரம் பதிலளிக்க உங்களை வரவேற்கிறோம். கலந்தாலோசனை மையத்தினூடாக தனிப்பட்ட சமர்ப்பித்தலையும் நீங்கள் பதிவேற்றம் செய்யலாம்

உங்களின் பதில்களை உங்களின் பெயரைக் குறிப்பிட்டு அல்லது பெயரைக்குறிப்பிடாமல் நீங்கள் சமர்ப்பிக்கலாம். நீங்கள் சம்மதத்தை வழங்கினால், கலந்தாலோசனைக்கான காலம் முடிந்ததும் பதில்களை நாங்கள் வெளியிடுவோம். நீங்கள் சம்மதிக்காதுவிட்டால், அல்லது இந்தச் சமர்ப்பணத்தை வெளியிடுவதில் ஏதேனும் சட்டப்பிரச்சினைகள் உருவாகுமெனில், பதில்களை நாங்கள் வெளியிடமாட்டோம். தகவல் சுதந்திர கோரிக்கைகள் அல்லது பாராளுமன்ற கோரிக்கைகளுக்கு அமைவாகச் சமர்ப்பணங்கள் இருக்கலாம்.

கலந்தாலோசனை நடைமுறையூடாகப் பகிர்ந்துகொள்ளப்பட்ட சொந்தத் தகவல்கள், தனிஉரிமைச் சட்டத்தின் பிரகாரம் (*Privacy Act 1988* (Cth)) மேற்கொள்ளப்படும் சட்டமாஅதிபர் திணைக்களம் எவ்வாறு தனிப்பட்டவர்களின் தகவல்களைச் சேகரிக்கிறது, சேமித்துவைக்கிறது அத்துடன் பயன்படுத்துகிறது என்பது குறித்து மேலதிகதகவல்களைப் பெற்றுக்கொள்ள, தயவுசெய்து Attorney-General's Department's Privacy Policy-ஐப் பாருங்கள்.

### *பிற கலந்தாலோசனை வழிமுறைகள்*

நேரடியாக அல்லது காணொளியூடாக அல்லது தொலைபேசியூடாக உங்களுடைய கருத்தைத் தெரிவிக்க நீங்கள் விரும்பினால், தயவுசெய்து ForcedMarriage@ag.gov.au-ஐத் தொடர்புகொள்ளவும்.

ஆங்கிலம் அல்லாத வேறொருமொழியில் நீங்கள் உங்களின் கருத்தை வழங்க விரும்பினால், தயவுசெய்து ForcedMarriage@ag.gov.au-ஐத் தொடர்புகொள்ளவும்.

அணுகுவதற்கான வேறு தேவைகள் உங்களுக்கு இருந்தால், ForcedMarriage@ag.gov.au -இல் எங்களை தொடர்புகொண்டு தெரிவிக்கவும்.

## ஆலோசனை காலம்

29/07/2024 -ஆலோசனை ஆரம்பித்து, 23/09/2024-இல் முடிவடையும்.

## விசாரணைகள்

உங்களுடைய கருத்தை கலந்துரையாட நீங்கள் விரும்பினால், ForcedMarriage@ag.gov.au.-ஐத் தயவுசெய்து தொடர்புகொள்ளவும்.

# அறிமுகம்

கட்டாயத்திருமணத்தில் அல்லது அதன் ஆபத்தில் இருக்கும் மக்களைத் திறம்படப் பாதுகாக்க ஆஸ்திரேலிய அரசாங்கம் அவர்களுடன் சேர்ந்து பணியாற்றுகிறது. இந்தக் கட்டுரையில் விபரிக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் பொது (காமன்வெல்த்), மாநில அல்லது பிரதேச அரசாங்கங்களின் ஒப்புக்கொள்ளப்பட்ட கருத்தைப் பிரதிநிதித்துவம் செய்யவில்லை அல்லது அரசாங்கங்களை உறுயளிக்கும்படி செய்யவும் இல்லை. கட்டாயத்திருமண சிவில் பாதுகாப்புகள் மற்றும் பரிகாரங்களை மேம்படுத்த ஒரு மாதிரிஅமைப்பை உருவாக்கவும்,, அதற்கு இணங்கவும் அனைத்து ஆஸ்திரேலிய அதிகார எல்லைகள் மேலும் பணியை இந்த ஆலோசனை கட்டுரைக்கான பதில்கள் அறியத்தரும்.

ஆஸ்திரேலியாவிலிருக்கும் ஒவ்வொருவரும் யாரை, எப்போது திருமணம் செய்யவேண்டுமென்பதை தாமாகவே சுதந்திரமாகத் தெரிவுசெய்யலாம். ஒருவர் விரும்பாதபோது அவருக்குத் திருமணம் செய்துவைப்பது ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாததாகும் என்பதுடன் ஆஸ்திரேலியாவில் இது ஒரு குற்றமாகும்.

கட்டாயத்திருமணத்தில் அல்லது அதன் ஆபத்தில் இருக்கும் மக்களுக்கு, சிவில் பாதுகாப்புகளையும், பரிகாரங்களையும் உறுதிப்படுத்தும் ஒன்றிணைக்கப்பட்ட தேசிய பிரதிபலிப்பினூடாகப், பணியாற்றுவதற்கு ஆஸ்திரேலிய அரசாங்கங்கள் உறுதிபூண்டுள்ளன. சமமான, அணுகக்கூடிய மற்றும் செயற்படுத்தக்கூடிய ஒரு மாதிரியை அடைவதற்கும், பாதிக்கப்பட்ட-உயிர்பிழைத்தோரை பலவந்தமாக ஆஸ்திரேலியாவிலிருந்து அகற்றுவது மற்றும் குழந்தைகள், வயதானோர் ஆகிய இருசாராருக்கும் கிடைக்கக்கூடிய பாதுகாப்புகளை வழங்குதல் போன்ற கட்டாயத்திருமண பிரதிபலிப்புகள் குறித்த தனித்துவமான சாவால்களை எதிர்கொள்வதற்கும் அரசாங்கங்கங்களியே ஒத்துழைப்பு அடிப்படையானது,

ஆஸ்திரேலியாவின் தற்போதய கட்டாயத்திருமணத்திற்கான பிரதிபலிப்பைப் பூர்த்திசெய்யும◌ புதிய தலையீடு மற்றும் தடுக்கும் ஏற்பாடுகள் போன்றவற்றை வழங்குவதை, மேம்படுத்தப்பட்ட சிவில் பாதுகாப்பு மற்றும் பரிகாரங்கள் குறியாகக்கொண்டுள்ளன. அவை பின்வருவனவற்றுள் அடங்கும்:

- ‘கடத்தப்பட்ட ஆட்கள் திட்ட’த்திற்காக ஆஸ்திரேலிய அரசாங்கத்தின் ஆதரவினூடாகக் கிடைக்கக்கூடிய அர்ப்பணிக்கப்பட்ட திருமண உதவிவழி
- சமூகக் கல்வி மற்றும் விழிப்புணர்வு-தூண்டல் போன்ற நிபுணத்துவ ஆதரவினை வழங்கும் ‘கட்டாயத்திருமண விசேட ஆதரவுத்திட்டம் -2025’ இனை நிறுவுவதற்கு ஆஸ்திரேலிய அரசாங்கத்திடமிருந்து புதிய நிதியுதவித்திட்டம்
- கட்டாயத்திருமணத்தைக் கருத்தில் கொள்ளவதற்கும், கட்டாயத்திருமணத்தை அனுபவித்துக்கொண்டிருக்கும் அல்லது அதன்

ஆபத்தில் இருப்பவர்களுக்கு ஆதரவளிக்கவும் சமூக நிறுவனங்களுக்கான நன்கொடை

- Anti-Slavery Australia- ஆல் வழங்கப்பட்ட கட்டாயத்திருமணத்தில் அல்லது கட்டாயத்திருமணம் செய்யுமாறு பலவந்தப்படுத்தப்படுவது குறித்துக் கவலைப்படும் மக்களுக்கு ஆஸ்திரேலியாவின் அர்ப்பணிப்புள்ள தேசிய சேவையாகிய, MyBlueSky.

கட்டாயத்திருமணத்தில் அல்லது அதன் ஆபத்தில் இருக்கும் மக்களுக்கு, சமூக தேவைகளைப் பூர்த்திசெய்கிறதா என்பதையும், மேம்படுத்தப்பட்ட சிவில் பாதுகாப்புகளை வழங்குகிறதா என்பதையும் உறுதிப்படுத்துவதற்கு ஆஸ்திரேலிய பொதுமக்களுடைய ஈடுபாடு அவசியமாகும்.

## கட்டாயத்திருமணம்

ஒருவர் தான் பலவந்தப்படுத்தப்படுவதாக, பயமுறுத்தப்படுவதாக, அல்லது ஏமாற்றப்படுவதாக, அல்லது ஒரு திருமண வைபவத்தின் தன்மை மற்றும் அதன் பாதிப்பைப் புரிந்துகொள்ளும் திறமையற்றவராகவும், அல்லது அவர் திருமணம் செய்யும்போது 16 வயதிற்குட்பட்டவராகவும், அத்துடன் சுதந்திரம் இல்லாமலும், முழுச் சம்மதம் இல்லாமலும் அவர் திருமணம் செய்யும்போது, கட்டாயத்திருமணம் இடம்பெறுகிறது.

எந்தவொரு பின்னணியைக்கொண்டவருக்கும் கட்டாயத்திருமணம் நடக்கலாம். இளம் பெண்கள் மற்றும் சிறுமிகள் மிகவும் ஆபத்தில் இருக்கிறார்கள், ஆனால், எல்லா வயதினர், பாலினங்கள், பாலியல் நோக்கு நிலைகள், கலாசாரங்கள் அல்லது மதங்கள் போன்றவற்றைச் சேர்ந்த மக்கள் அனைவரும் கட்டாயத்திருமணத்திற்கு உட்படலாம். ஆஸ்திரேலியாவில் கட்டாயத்திருமணமானது, அடிமைத்தனமான நடவடிக்கையாகக் கருதப்படுகிறது அத்துடன், இது குடும்ப மற்றும் வீட்டு வன்செயலாகக் கருதப்படுவதுடன் பாலினம் சார்ந்த வன்முறையின் வடிவமாகவும் அடையாளம் காணப்படுகிறது. *பெண்கள் மற்றும் அவர்களின் குழந்தைகளுக்கு எதிரான வன்முறையை முடிக்கும் தேசியதிட்டத்தில் (National Plan to End Violence Against Women and their Children) (2022-2032*). கவனிக்கப்பட வேண்டிய ஒரு பிரச்சினையாக கட்டாயத்திருமணம் அடையாளம் காணப்பட்டுள்ளது

கட்டாயத்திருமணமானது, ஒழுங்குபடுத்தப்பட்ட, மற்றும் போலித் திருமணங்களிலிருந்து வேறுபட்டதென்பதைக் கவனித்துக்கொள்வது முக்கியமானதாகும். அறிமுகப்படுத்துவதில் அல்லது ஒரு துணைவரைத் தெரிவுசெய்வதில், குடும்பம் அல்லது சமூக அங்கத்தவர்கள் முக்கிய பங்கெடுத்து, திருமணத்திற்கு இரு தரப்பினரும் சம்மதிக்கும் வேளை ஒழுங்குபடுத்தப்பட்ட திருமணம் நிகழ்வதுடன் இது சட்டபூர்வமானது. மோசடி நோக்கங்களுக்காக இரு தரப்பினராலும் ஒரு பொய்யான திருமணம் விருப்பத்துடன் நடக்கும்போது, போலித்திருமணம் இடம்பெறுகிறது

## ஆஸ்திரேலியாவில் கட்டாயத்திருமணத்திற்குத் தற்போதய பிரதிபலிப்பு.

ஆட்கடத்தல், அடிமைத்தனம் உட்பட அடிமைத்தனம், மற்றும் கட்டாயத்தொழில் போன்ற பிற அடிமைத்தனத்தை ஒத்த செயற்பாடுகள் அடங்கலாகச் சுரண்டலின் பாரதூரமான வடிவங்களை இல்லாமல்செய்ய கட்டாயத்திருமணத்திற்கான ஆஸ்திரேலியாவின் பிரதிபலிப்பு ஆஸ்திரேலிய அரசாங்கத்தின் தந்திரோபாயத்தின் ஒருபகுதியாக அமைகிறது. கூட்டாக இந்த நடவடிக்கைகள் 'நவீன அடிமைத்தனம்' என அடிக்கடி குறிப்பிடப்படுகிறது.

கட்டாயத்திருமணம் உட்பட, நவீன அடிமைத்தனத்தை இல்லாமல் செய்வதற்கு ஆஸ்திரேலியாவின் உபாயம் National Action Plan to Combat Modern Slavery 2020 – 2025 (National Action Plan) இல் விபரிக்கப்பட்டுள்ளது. கட்டாயத்திருமணத்தில் அல்லது அதன் ஆபத்தில் இருக்கும் ஒவ்வொருவருக்கும் சிவில் பாதுகாப்புகளையும், பரிகாரங்களையும் மேம்படுத்த ஒரு மாதிரியை உருவாக்குவது, தேசிய செயற்திட்டத்தினுள் இருக்கும் குறிப்பிட்ட உறுதியாகும்.

கட்டாயத்திருமணத் தண்டனைக்குரிய குற்றங்கள் காமன்வெல்த் *Criminal Code Act 1995* (தண்டனைச் சட்டக்கோவை)-இல் அடங்கியுள்ளன. 2013 இல் இவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன குற்றவியல் சட்டக்கோவையின் கீழ், கட்டாயத்திருமணத்திற்கு ஒருவரை வற்புறுத்துதல், அல்லது கட்டாயத்திருமணத்திற்கு ஒரு தரப்பினர் ஆக்குவது சட்டவிரோதமாகும் நீங்களே கட்டாயத்திருமணத்தினால் பாதிக்கப்பட்டவராக இருக்காதுவிட்டால், கட்டாயத்திருமணத்திற்கு ஒரு தரப்பினராக இருப்பதானது, கட்டாயத்திருமணத்தினால் பாதிக்கப்பட்டவரென நீங்கள் அறிந்த அல்லது சந்தேகிக்கும் ஒரு நபரை திருமணம் செய்ய இணங்குவதாகும்.

ஆஸ்திரேலியாவில், கட்டாயத்திருமணக் குற்றங்களுக்கு ஆரம்ப விசாரணை அதிகாரி ஆஸ்திரேலிய ஃபெடரல் காவல்துறை (AFP) ஆகும். பாதுகாப்பான தங்குமிடம், நிதிசார்ந்த, ஆதரவு, ஆலோசனை மற்றும் புலம்பெயர் சட்ட ஆலோசனை போன்றவற்றிற்கும் கட்டாயத்திருமணத்தில் அல்லது அதன் ஆபத்தில் இருக்கும் ஆட்களை AFP சிபாரிசு செய்ய முடியும். குற்ற விசாரணை அல்லது வழக்குபோன்றவற்றுடன் ஒருவர் ஒத்துழைக்க விரும்பாதுவிட்டாலும்கூட இந்த உதவி கிடைக்கும்.

### *ஆதரவு சேவைகள்*

கடத்தப்பட்ட ஆட்களுக்கான உதவித் திட்டத்திற்கு (STPP), ஆஸ்திரேலிய அரசாங்க - நிதியுதவி ஊடாக, ஆஸ்திரேலிய செஞ்சிலுவைச் சங்கத்தால் வழங்கப்படுகிறது. கட்டாயத்திருமணத்தில் அல்லது அதன் ஆபத்தில் இருக்கும் மக்களுக்கு 200 நாட்கள் வரை மிகவும் பயனுள்ள ஆதரவினை STPP வழங்குகிறது. தற்சமயம், AFP-ஆல் மாத்திரம்தான் சேவைபெறுநர்களை STPP-க்குச் சிபாரிசு செய்ய முடியும். ஆயினும், 2024 நடுப்பகுதியில், STPP-க்கு மேலதிக சிபாரிசுப்பாதை ஒன்று நிறுவப்படும்.

AFP-உடன் ஈடுபடுவதற்கான அவசியம் இல்லாமல், ஒரு சமூக சேவை வழங்குபவர் ஊடாக, பாதிக்கப்பட்ட- உயிர்பிழைத்தோர் STPP-ஐ அணுகக்கூடியதாக இருக்கும் என்பது இதன் அர்த்தமாகும். 28 நவம்பர் 2025 வரை கூடுதலான பரிந்துரை பாதை முன்னோடியை செயல்படுத்துவதற்கு இரட்சணியர் சேனை (Salvation Army) யை ஒரு திறந்த போட்டி நன்கொடை நடைமுறையைத் தொடர்ந்து தெரிவுசெய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாநிலம் மற்றும் பிரதேசத்தில், காலை 9 மணிக்கும் மாலை 5 மணிக்கும் இடையில் STPP-க்கு சாத்தியப்படக்கூடிய பாதிக்கப்பட்ட-உயிர்பிழைத்தோரின் தகைமையை அவர்கள் மதிப்பீடு செய்வார்கள், அத்துடன், வேலை நேரத்தின் பின்னர் தகவல்களைப் பெறுவதற்காக ஓர் இணையத்தளம், செய்தி சேவை போன்றவற்றை வைத்திருப்பார்கள்.

புதிய கட்டாய திருமண நிபுணர் ஆதரவுத் திட்டம் (FMSSP), ஒன்றினை நிறுவுவதற்கு 5 ஆண்டுகளுக்கு மேலாக $12.1 மில்லியனை வழங்கவும் ஆஸ்திரேலிய அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது. இது ஜனவரி 2025-இல் ஆரம்பிக்கவிருக்கும் ஒரு தேசிய கட்டாயத்திருமண திட்டமாகும். உளநல ஆலோசனை, தேவைப்பட்டால், அவசர தங்குமிடம் போன்றவை உட்பட, சேவைபெறுநரின் உடல் நலம், நல்வாழ்வு, சரீர மற்றும் சமூக தேவைகள் போன்வற்றைப் பூர்த்திசெய்வதற்கு கட்டாய திருமணத்தில் அல்லது அதன் ஆபத்தில் இருப்பவர்கள் அல்லது அனுபவித்தவர்களுக்கு ஒவ்வொருவருக்குமான தேவைகளை அடிப்படையாகக்கொண்ட தடுப்பு மற்றும் ஆரம்ப தலையீட்டு ஆதரவு போன்றவற்றை FMSSP வழங்கும். சமுகம் முழுவதும் 'soft entry' புள்ளிகள் ஊடாக இந்தத் திட்டத்தை அணுகக்கூடிய, கட்டாயத்திருமணத்தில் அல்லது அதன் ஆபத்தில் இருக்கும் ஆட்களுடன் இந்த FMSSP 'no wrong door' அணுகுமுறையைக் கொண்டிருக்கும். ஆஸ்திரேலியாவிலிருக்கும் சமூகங்களுடன் நெருக்கமாக பணியாற்றிக்கொண்டு, புதிய சமூகக்கல்வி மற்றும் விழிப்புணர்வு-தூண்டும் முயற்சிகளையும் FMSSP உள்ளடக்கும்.

FMSSP நிறுவனத்தைப் பூர்த்திசெய்ய, கல்வி, விழிப்புணர்வு தூண்டல் மற்றும் இணைந்துசெயற்படல் ஊடாக, கட்டாயத்திருமணத் தடை வழங்கப்படுவதைத் தொடர்ந்தும் நீடிப்பதற்கு, Anti-Slavery Australia- இனால் வழங்கப்பட்ட *Speak Now திட்டத்தை நீடிக்க ஆஸ்திரேலிய அரசாங்கம் $2.2 மில்லியனை* வழங்க உறுதியளித்துள்ளது.

## பரவல் மற்றும் தரவு

*அறிக்கைகளின் எண்ணிக்கை*

நவீன அடிமைத்தன அறிக்கைகள் அனைத்தினதும் ஒரு குறிப்பிட்ட விகிதாசாரத்தில் AFP-கணக்குக்கு கட்டாயத்திருமணம் பற்றிய அறிக்கைகளின் எண்ணிக்கை. கட்டாயத் திருமணம் பெரும்பாலும் மறைக்கப்பட்டு, குறைவாகப் புகாரளிக்கப்படுவதுடன் குறைவாகக் கண்டறியப்படுகிறது. பாதிக்கப்பட்ட-உயிர்பிழைத்தோர் மிகவும் இளவயதினர் என்பதுடன், முன்வந்து புகாரளிப்பதற்குப் பயப்படக்கூடும். வற்புறுத்துதல் மற்றும் கட்டுப்படுத்துதல் போன்றவை பாதிக்கப்பட்ட-உயிர்பிழைத்தோர் உதவியை நாடுவதைத் தடுக்கக்கூடும்.

ஆஸ்திரேலியாவில், நவீன அடிமைத்தனத்தால் ஐந்து பேர்களில் ஒருவர் பாதிக்கப்பட்ட-உயிர்பிழைத்தோராவாரென ஆய்வுகள் குறிப்பிடுகின்றன.


**அட்டவணை 1: 2018 FY முதல் 2023 FY வரை (5 ஆண்டுகள்) AFP-ஆல் பெற்றுக்கொள்ளப்பட்ட நவீன அடிமைத்தன அறிக்கைகள்**

| | 2018-19 FY | 2019-20 FY | 2020-21FY | 2021-22 FY | **2022-23 FY** |
|---|---|---|---|---|---|
| **கட்டாயத்திருமணம்** | 95 | 92 | 79 | 84 | **90** |
| **மொத்த நவீன அடிமைத்தன அறிக்கைகள்** | 220 | 223 | 224 | 294 | **340** |

*பாதிக்கப்பட்ட-உயிர்பிழைத்தோரின் வயது*

அனேகமாக 16 வயதிற்குட்பட்டவர்களுடன் 18 வய்திற்குட்பட்ட பாதிக்கப்பட்ட-உயிர்பிழைத்தவர்களை பெரும்பான்மையான AFP க்கான அறிக்கைகள் உட்படுத்துகின்றன. 1 யூலை 2016 முதல் 30 யூன் 2022 வரை, 16 வயதிற்குட்பட்டவர்கள் 31%, மற்றும் 16 க்கும் 18 வயதிற்கும் இடைப்பட்டவர்கள் 25% அடங்கிய 18 வயதிற்கும் உட்பட்ட பாதிக்கப்பட்ட-உயிர்பிழைத்தோர் அறிக்கைகளின் 56%-ஐ உள்ளடக்குகிறார்கள்.

**வரைபடம்1: கட்டாயத்திருமண அறிக்கைகள் – அறிவித்த வேளை பாதிக்கப்பட்ட-உயிர்பிழைத்தவரின் வயது (5-வருடம் பகுப்பாய்வு)**




*குறிப்பு: இந்தப் புள்ளிவிபரங்கள் இடம்பெற்ற,குற்றங்கள், எத்தனித்த குற்றச்செயல்கள் மற்றும் இடம்பெறக்கூடிய ஆபத்தில் இருக்கும் குற்றச்செயல்களின் அறிக்கைகளுடன் தொடர்புள்ளவை*

## வழக்கு எடுத்துக்காட்டுகள்

ஆட்கள் கல்யாணத்திற்கு கட்டாயப்படுத்தப்படக்கூடிய சில வழிகளின் எடுத்துக்காட்டுகளை கீழே இருக்கும் கதைகள் தருகின்றன இவை, உண்மையான வழக்குகளிலிருந்து எடுக்கப்பட்ட காட்சிகள்; கற்பனையான எடுத்துக்காட்டுகள் ஆகும்.

**வழக்கு எடுத்துக்காட்டு**

யஸ்மின் 15 வயதுடைய ஆஸ்திரேலிய பிரஜை ஆவார்.

அவளுடைய பெற்றோர் ஆஸ்திரேலியாவில் இருக்கும்போது, அவள் தனது தாத்தா பாட்டியைப் பார்ப்பதற்காக வெளி நாடுகளுக்குப் பயணம் செய்கிறாள். இந்தப் பயணத்தில், தன்னிலும் அநேகமாக 20 வயதுகூடிய அவளது மைத்துனரைத் தனக்கு திருமணம்செய்வதற்கு அவளது பெற்றோர் ஒழுங்குபடுத்தியிருப்பதை அவள் விரைவாக கண்டறிகிறாள். யஸ்மின் தான் திருமணம் செய்ய விருப்பமில்லையென அவளது பெற்றோருக்குச் சொல்கிறாள், ஆனால், அவளுடைய குடும்பம் மற்றும் சமூகத்திற்காகக் திருமணத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி திருமணம் நடந்தாகவேண்டுமென அவளின் பெற்றோர் கட்டாயப்படுத்துகிறார்கள்.

அவளது உறவினர் யஸ்மினின் கடவுச்சீட்டை அவளிடமிருந்துஎடுத்துவிட்டு அவளுக்குப் பழக்கமில்லாத யஸ்மினின் நாட்டின் ஒரு பகுதியில் அவளுடைய உறவினரின் வீட்டிற்கு யஸ்மினைக் கொண்டு வருகிறார்கள். வீட்டைவிட்டு வெளியேற அவள் அனுமதிக்கப்படவில்லை அத்துடன் அவளுடைய பெற்றோர் அவளை அழைக்கும் வேளையைத்தவிர, அவளுக்கு தொலைபேசியை அணுக வாய்ப்பளிக்கப்படவில்லை.

ஒரு நாள், பெற்றோர் தாம் அவளுக்காகத் தெரிவுசெய்த மனிதனை திருமணம் செய்வதற்கு அவள் இணங்கினால் மாத்திரம் அவளால் ஆஸ்திரேலியாவுக்குத் திரும்பிவர முடியுமெனவும் பாடசாலைக்கு மீண்டும் போக முடியுமென யஸ்மினை அழைத்துச் சொல்கிறார்கள். யஸ்மின் தான் அந்த மனிதனை திருமணம் செய்ய இணங்குவதாக பெற்றோருக்குச் சொல்லுகிறாள் ஆனால், பெற்றோருடன் பேசிமுடிந்ததும், என்ன நடந்தது என்பதையும், தன்னால் அந்தத் திருமணத்தைச் செய்ய முடியாதெனவும் ஆஸ்திரேலியாவிலிருக்கும் நெருங்கிய நண்பரை உடனடியாகத் தொடர்புகொண்டு அந்தரங்கத்தைப் பகிர்ந்துகொள்கிறாள். தான் எங்கே இருக்கிறேன் என்று தனக்குத் தெரியாதெனவும், எவ்வாறு உதவியைப் பெற்றுக்கொள்வதென்று தனக்குத் தெரியாதெனவும் தனது சினேகிதிக்கு அவள் சொல்கிறாள். உதவி மற்றும் ஆலோசனையைக் கேட்பதற்காக அவளுடைய சினேகிதி, உள்ளூர் சமூக நிறுவனத்தைத் தொடர்புகொள்கிறாள்.

**வழக்கு எடுத்துக்காட்டு**

சாம் 20 வயதுள்ள தன்பாலினச் சேர்க்கையில் ஈடுபடுகிறவன் இரண்டு வருடங்களாக தனது நண்பனுடன் தொடர்பில் இருக்கிறான்.

சாம்-இனுடைய பெற்றோர் மிகவும் கலாசாரமானவர்கள் சாம் தனது பெற்றோரை மிகவும் நன்றாகப் பராமரிக்கிறான்; தனது நண்பனை அவர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்களெனப் பயப்படுகிறான்.

ஒரு நாள், சாம்-இனுடைய நண்பனுடன் சாமை அவனின் மாமனார் பார்த்து அவனின் பெற்றோருக்கு அறிவிக்கிறார். அவர்களுடைய சமூகத்தினுள்ளே குடும்பத்தினுடைய நற்பெயருக்கு அவதூறு வருவதைத் தடுப்பதற்காக ஒரு பெண்ணுக்குச் சாமைத் திருமணம் செய்து கொடுக்குமாறு அவர் சாமினுடைய பெற்றோரை நம்பவைக்கிறார்.

அதன்பின்னர் விரைவாக, அவனைத்திருமணம் செய்யச் சம்மதிக்கும் பெண் ஒருவரை அவர்களுடைய சமூகத்திலிருந்து அவனுடைய பெற்றோர்கள் கண்டுபிடிக்கிறார்கள். சாம் அந்தப் பெண்ணை முன்னர் சந்தித்திருக்கவில்லை மற்றும் தனக்கு அந்தப் பெண்ணைத் திருமணம் செய்ய விருப்பமில்லையெனத் தனது குடும்பத்தாருக்குச் சொல்ல முயற்சிக்கிறான். அவன் சுய நலமிக்கவனாக இருப்பதாகவும் தமது குடும்பத்தாருக்கு அவமானத்தைக் கொண்டுவருவதாகவும சாமினுடைய மாமன் அவனுக்குச் சொல்லுகிறார் அத்துடன் சாமினுடைய பெற்றோர் திருமண ஏற்பாடுகளைத் தொடருமாறு கட்டாயப்படுத்துகிறார். சாம் மனமிரங்கி சட்டப்படியான திருமண வைபவ ஏற்பாடுகளை அனுசரிக்கிறான் ஆனால் திருமணத்தில் இருப்பதற்கு விரும்பாமல் சந்தோசம் இழந்து காணப்படுகிறான் இதை அவன் கூறும்போது, சாம் தனது நண்பனிடம் திரும்பிப் போய்விடுவானென சாமினுடைய மாமனார் கோபமடைந்து, திருமணத்திலிருந்து பயந்து அவனை வெளியேற விடாமல் தடுக்குமாறு பெற்றோரைச் சமாதானப்படுத்துகிறார்.

இதைப் காவல்துறைக்கு முறையிட்டுப், பேசுவது அவனுடைய பெற்றோருக்குப் பிரச்சினையைக் கொண்டுவருமென சாம் பயப்படுகிறான். தனது பெற்றோருக்கு முறையிடலாமென சாம் உணருகிறான் ஆனால்,திருமணத்தைச் செய்யுமாறு பெற்றோருக்கு மாமனார் தொடர்ந்தும் அழுத்தம் கொடுக்கக்கூடுமெனக் கவலைப்படுகிறான்.

**வழக்கு எடுத்துக்காட்டு**

சாறா 17 வயதுடையவர், ஒரு சில மாதங்களில் தரம் 12 ஐ முடிப்பார்.

சாராவினுடைய தகப்பனார் மிகவும் கடினமானவர் மற்றும் கட்டுப்படுத்துபவர் அத்துடன் அவள் தகப்பனாருக்குப் பயப்படுகிறாள். சாராவுக்கு வயது 15 ஆக இருந்தபோது, அவளுடைய தகப்பனார் ஒரு ஆளை அவளுக்குத் திருமணம் செய்துவைக்க அவளது சொந்த நாட்டிலிருந்து

ஒழுங்குசெய்தார். சாரா தனது தகப்பனாரை மன்றாடி, தான் தனது உயர் கல்வியை முடிக்குமட்டுமாவது தாமதிக்குமாறு சமாதானம் செய்கிறாள்.

சாரா தனது உயர்கல்வியைக் கூடியகெதியில் முடிக்கிறார், சாராவின் தகப்பனார் அவளுக்காக தெரிவுசெய்த மனிதனைத் திருமணம் செய்வதற்காக அவளது சொந்த நாட்டிற்குப் பிரயாணம் செய்வதற்கு ஒழுங்குகளைச் செய்ய தகப்பனார் ஆரம்பித்துவிட்டார். மீண்டும் தனது தந்தையை சமாதானப்படுத்துவதற்கு அவளால் இயலாமல் போகலாமென சாரா உணருகிறாள் அத்துடன் இந்தத் திருமணம் இடம்பெறுவதை அவள் விரும்பவில்லை.

அவளுடைய பிரயாண திகதி நெருங்கும்போது, சாரா தனது ஆசிரியருடன் தனது அந்தரங்கத்தைப் பகிர்ந்துகொள்கிறாள். சாரா நி.ச.வே-இல் வசிக்கிறாள்; அவளின் வயது 17. சிறுவர் பாதுகாப்பு சேவைகளுக்கு அறிவிக்கவேண்டுமென்பது கட்டாயமானதல்ல; எனவே பாடசாலை நி.ச.வே காவல்துறைக்கு அறிவிக்கும். காவல்துறை, ஆசிரியர் மற்றும் குடும்பத்தைத் தொடர்புகொள்ளும்; அதன் விளைவாக, சாரா கட்டாயத்திருமண ஆபத்தில் இருப்பதாக மதிப்பிட்டது.


## ஆலோசனைக்கான முன்மொழிவுகள்

கட்டாயத்திருமணத்திற்கான ஆஸ்திரேலியாவின் அணுகுமுறையை வலுவூட்ட ஒரு மாதிரிக்கான வரைவு விருப்பங்களை இந்த ஆலோசனைக் கட்டுரை கோடிட்டுக் காட்டுகிறது. இந்த விருப்பங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் ஆஸ்திரேலிய அரசாங்கத்தின் விவாதத்திற்காக இருப்பதுடன் மேலும் பரிசீலனைக்கும், முடிவுக்கும் உட்படும். இந்த அறிக்கையில் பரிசீலிக்கப்பட்ட முக்கியமான மூன்று செயற்பாடுகளாவன:

1. குடும்ப மற்றும் வீட்டு வன்முறை சேவைகளைப் பாதிக்கப்பட்ட-உயிர்பிழைத்தோர் அணுகுவதை மேம்படுத்துவதற்கு குடும்ப மற்றும் வீட்டு வன்செயலின் ஒரு வடிவமாக கட்டாயத்திருமணத்தின் **பகிரப்பட்ட புரிதலைக் கட்டியெழுப்புதல்**
2. ஆரம்ப அடையாளம், தலையீடு மற்றும் தடுத்தல் போன்றவற்றிற்கு ஆதரவளிப்பதற்காக **கல்வி மற்றும் விழிப்புணர்வு-தூண்டலை◌ மேம்படுத்தல்**.

3. இதனூடாக கட்டாயத் திருமணத்தின் **சிவில் பாதுகாப்புகள் மற்றும் பரிகாரங்களை வலுவூட்டுதல்**
    a. **தெரிவு A**: தற்போதிருக்கும் பொது, மாநில மற்றும் பிரதேச குடும்பம் மற்றும் வீட்டு வன்முறை கட்டமைப்புகளை மேம்பட்ட பாதுகாப்பினுள் ஒன்றுசேர்த்தல்.
        i. அவர்களது குடும்ப மற்றும் வீட்டு வன்முறை கட்டமைப்புகளில் பொருத்தமாக ஒன்றுசேர்ப்பதற்கு, அதிகார எல்லைகளுக்கான பகிரப்பட்ட கொள்கைகள் அல்லது மேம்படுத்தப்பட்ட பாதுகாப்பு அம்சங்களை மேம்படுத்துதல் மற்றும் இணங்குதல் ஊடாக இது உள்ளடக்கும், **அல்லது**
    b. **தெரிவு B**: மாநில மற்றும் பிரதேச அரசாங்கங்களின் நிறைவேற்று ஆதரவுடன், பொது சட்டவாக்கத்தினூடாக புதிய பாதுகாப்புகளை நிறுவுதல்.

ஜனவரி 2025 ஆரம்பிக்கும் கட்டாயத்திருமண நிபுணர் ஆதரவு திட்டத்தை (Forced Marriage Specialist Support Program) நிறுவுவதன் மூலம் கட்டாயத்திருமணத்தில் அல்லது அதன் ஆபத்தில் இருக்கும் மக்களுக்கான ஆதரவை மேம்படுத்த ஆஸ்திரேலிய அரசாங்கத்தின் உறுதிப்பாட்டுடன் இந்தப் பணி பூர்த்திசெய்யப்படும்.




**ஆலோசனை கேள்விகள்**

1. கட்டாயத்திருமணத்திற்கு தேசியஅளவில் சீரான பதில்களை மேம்படுத்த இவை பயனுள்ள விருப்பத்தேர்வுகளா? கருத்தில் கொள்ளவேண்டிய பல்வேறு விருப்பத்தேர்வுகள் உள்ளதா?

# பகுதி1- குடுமப் மற்றும் வீட்டு வன்முறை சேவைக்கான பாதிக்கப்பட்டு-உயிர்பிழைத்தோர் அணுகலை மேம்படுத்துவதற்கு, குடும்ப மற்றும் வீட்டு வன்முறையின் ஒரு வடிவமாக கட்டாயத்திருமணத்தின் பகிரப்பட்ட புரிதலைக் கட்டிவளர்த்தல்

## தேடிய பதில்

ஆஸ்திரேலிய சட்டவரம்புகள் ஒவ்வொன்றிலும் குடும்பம் மற்றும் வீட்டு வன்முறை திட்டங்களூடாக ஆதரவுகள், மற்றும் பாதுகாப்புகளை அணுகுவதற்கு கட்டாயத்திருமணத்தில் அல்லது அதன் ஆபத்தில் இருக்கும் ஆட்களால் இயலும்.

## சுருக்கம்

கட்டாயத்திருமணம் பொதுவாக குடும்ப சூழலில்தான் இடம்பெறுகிறது ஆயினும், ஆஸ்திரேலியா முழுவதும், குடும்ப மற்றும் வீட்டு வன்முறையின் ஒரு வடிவமாக கட்டாயத்திருமணத்தை அங்கீகரிப்பது மாறுபடுகிறது. உதாரணமாக, கட்டாயத்திருமணத்தை குடும்ப வன்முறையின் ஒரு வடிவமாக நியூ சவுத் வேல்ஸ்(NSW), விக்டோரியா(VIC) மற்றும் சவுத் ஆஸ்திரேலியா (SA) அனைத்தும் ஏற்றுக்கொள்கின்றன ஆனால், குயின்ஸ்லாந்து (QLD) மேற்கு ஆஸ்திரேலியா(WA), தஸ்மேனியா(TAS), வட பிரதேசம் (NT) மற்றும் ஆஸ்திரேலிய தலை நகர் பிரதேசம் (ACT) ஆகியன அதற்கான சட்டத்தில் கட்டாயத் திருமணத்தை வெளிப்படையாக ஏற்றுக்கொள்ளவில்லை.

கட்டாயத்திருமணத்திலிருந்து பாதிக்கப்பட்ட - தப்பிப்பிழைத்தோருக்கு நன்மைதரக்கூடிய பாதுகாப்புகள் மற்றும் ஆதரவுகள் குடும்ப மற்றும் வீட்டு வன்முறை கட்டமைப்பினுள் அடங்கும். சிவில் பாதுகாப்பு கட்டளைகள், சட்ட உதவி, மருத்துவப் பராமரிப்பு, உளநல ஆலோசனை, நிதியுதவி மற்றும் அவசரகால வீட்டுவசதி போன்றவற்றை இவற்றுடன் தொடர்புடைய பாதுகாப்புகள் மற்றும் உதவிகள் உள்ளடக்கலாம். ஆயினும், இத்தகைய பாதுகாப்புகள் மற்றும் உதவிகளுக்கு கட்டாயத்திருமண பாதிக்கப்பட்ட-உயிர்பிழைத்தோருக்கான அணுகலைப் குடும்பம் மற்றும் வீட்டு வன்முறையின் ஒரு வடிவமாக பொருத்தமற்ற ஏற்பு மட்டுப்படுத்துகிறது. சில வழக்குகளில், கட்டாயத்திருமணத்தில் அல்லது அதன் ஆபத்தில் இருக்கும் ஆட்களுக்கு பொருத்தமான பாதுகாப்புகள் மற்றும் ஆதரவுகள் கிடைக்காமல் இருப்பதுதான் இதற்கான காரணமாகும். ஏனைய வழக்குகளில், குடும்ப மற்றும் வீட்டு வன்முறையின் ஒரு வடிவமாக் கட்டாயத்திருமணம் குறித்த விழிப்புணர்வு மற்றும் அங்கீகாரம் இல்லாமையினால் அணுகுவதற்கான தடை ஏற்படலாம்.

கட்டாயத் திருமணமானது, குடும்பம் மற்றும் வீட்டு வன்முறையின் ஒரு வடிவமாக அனைத்து சட்டவரம்புகளிலும் ஏற்றுக்கொள்ளப்பட்டால், கட்டாயத்திருமணத்தின் வரைவிலக்கணம் மற்றும் அர்த்தத்தில் ஒரு வழிகாட்டலையும் சட்டவரம்புகள் வழங்கவேண்டும். குற்றவியல் சட்டக்கோவையில் (*Criminal Code* (Cth)) கட்டாயத்திருமணம் குறித்த வரையறைக்கு பரிந்துரை ஊடாக இதனைச் செய்யலாம். எப்பொழுது கட்டாயத்திருமணம் நிகழ்கிறது என்பதைப் பின்வருமாறு வரையறைசெய்யும்:

a) திருமணத்திற்கான இருதரப்பினரும் (பாதிக்கப்பட்டவர்), சுதத்திரமாகவும், முற்றாகவும் இணங்காமல் திருமண பந்தத்திற்குள் நுழைந்தார்கள்
   i. வற்புறுத்தல், அச்சுறுத்தல் மற்றும் ஏமாற்றுதல் ஆகியவற்றைப ் பயன்படுத்துவதால்; அல்லது
   ii. திருமண வைபவத்தின் தன்மை மற்றும் பாதிப்பு போன்றவற்றை பாதிக்கப்பட்டவர் புரிந்துகொள்ள முடியாமல் இருப்பதால்; அல்லது
b) திருமணம் நடந்தபோது,கல்யாணத்திற்கான இருதரப்பினரும் (பாதிக்கப்பட்டவர்) 16 வயதிற்கு உட்பட்டவர்களாக இருத்தல்

ஆஸ்திரேலியா முழுவதும் குடும்ப மற்றும் வீட்டு வன்முறையின் ஒரு வடிவமாக கட்டாயத்திருமணம் குறித்துப் பகிரப்பட்ட புரிந்துணர்வை வளர்க்கும் நடவடிக்கைகளையும் அதனைத் தொடர்ந்து கட்டாயத்திருமணத்தால் பாதிக்கப்பட்ட-உயிர்பிழைத்தோருக்கான குடும்பம் மற்றும் வீட்டு வன்முறை சேவைகளைப் பெற்றுக்கொள்ளக்கூடிய தன்மையை கீழேயுள்ள முன்மொழிவுகள் விபரித்துக் காட்டுகின்றன.

## பின்னூட்டத்திற்கான முன்மொழிவு

அதிகார வரம்பினைப்பொறுத்து, குடும்ப மற்றும் வீட்டு வன்முறையின் ஒரு வடிவமாக கட்டாயத்திருமணம் பற்றிய ஒரு பகிரப்பட்ட புரிந்துணர்தலைப் பின்வரும் வழிகளில் பெறலாம்:

- கட்டாயத்திருமணம் உட்பட வெளிப்படையாக குடும்ப மற்றும் வீட்டு வன்முறை குறித்த வரையறைகளில்
- பொருத்தமான வேளைகளில், குடும்ப மற்றும் வீட்டு வன்முறை வரையறைகளில் ஏற்கனவே கட்டாயத்திருமணம் குறிப்பிடப்பட்டிருப்பதை தெளிவுபடுத்துதல்
    - உதாரணமாக, குடும்பம் மற்றும் வீட்டு வன்முறையின் சட்டபூர்வமான எடுத்துக்காட்டாகக் கட்டாயத்திருமணத்தை உட்படுத்துவதன்மூலம்
- முக்கிய பங்குதாரர்களுடன் கல்வி, மற்றும் விழிப்புணர்வு-தூண்டும் நடவடிக்கைகளை மேம்படுத்துவதால் குடும்ப மற்றும் வீட்டு வன்முறையின் ஒரு வடிவமாக கட்டாயத்திருமணம் மேலும் தொடர்ந்தும் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

- ஒருவரை கல்லாயாணம்செய்யுமாறு கட்டாயப்படுத்தும் நோக்கத்திற்காக வற்புறுத்துதல், பயமுறுத்துதல், அத்துடன் ஏமாற்றுதல் அடங்கலாக, கட்டாய திருமணம் வரைக்கும் இட்டுச்செல்லும் நடவடிக்கைக்குப் பிரயோகிகிக்கப்படக்கூடிய குடும்பம் மற்றும் வீட்டு வன்செயல் போன்றவற்றின் வரையறைகளை நிச்சயப்படுத்துதல்

**கலந்தாலோசனைக் கேள்விகள்**

2. கட்டாயத்திருமணம், குடும்ப மற்றும் வீட்டுவன்முறையின் ஒரு வடிவமாக அங்கீகரிக்கப்பட வேண்டுமா? ஏன்?
3. குடும்பம் மற்றும் வீட்டு வன்முறையின் ஒரு வடிவமாகக் கட்டாயத்திருமணத்தை திறம்பட அங்கீகரிப்பதற்கு எவ்வித சட்ட, கொள்கை மாற்றங்கள் அல்லது கூடுதல் வழிகாட்டல் தேவை?
4. குடும்பத்திற்கு உதவுவதற்கு எவ்வித மேம்பாடுகள் அல்லது கூடுதல் வழிகாட்டல் தேவைப்படலாம் அத்துடன் குடும்பம் மற்றும் வீட்டு வன்முறையின் ஒரு வடிவமாக கட்டாயத்திருமணத்தை வீட்டு வன்செயல் சேவைகள் தொடர்ந்தும் ஏற்றுக்கொள்கின்றன.

# பகுதி 2 – கால்வி மற்றும் விழிப்புண்ர்வு--தூண்டலை மேம்படுத்துதல்

## தேடப்பட்ட பதில்கள்

சமூக அங்கத்தவர்கள் மற்றும் முன்னணி பதிலளிப்போரிடமிருந்து கட்டாயத்திருமணத்திற்கு
சமூகங்கள் மற்றும் நிறுவனங்கள் முழுவதும் மேம்படுத்தப்பட்ட அடையாளம் அத்துடன் கலாசாரத்திற்குப் பொருத்தமான மற்றும் நேரத்துடனான பதில்கள்

## சுருக்கம்

பங்குதாரர்களின் இதுவரையிலான கருத்து மேம்படுத்தப்பட்ட கட்டாயத்திருமண சிவில் பாதுகாப்புகள் மற்றும் பரிகாரங்களின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியுள்ளதுடன், சமூகக்கல்வி மற்றும் விழிப்புணர்வை தூண்டுதல், அதேபோல முன்னணி பதிலளிப்பவர்களுக்கான பயிற்சி ஆகியவற்றை உள்ளடக்கிய கட்டாயத் திருமணத்திற்கான முழுமையான பதிலின் ஒரு பகுதியாகும். கல்வி மற்றும் விழிப்புணர்வைத் தூண்டல் ஆகியவை ஆதரவைத்தேடும் நபர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கலாம்-, மேலும் பொருத்தமான ஆதரவு சேவைகளுடன் கைகோர்த்துச் செல்லலாம்.

அனைத்து அதிகாரஎல்லைகள் ஊடாக ஒரு முழுமையான ஒன்றிணைக்கப்பட்ட பிரதிபலிப்பை வலுவூட்டுவதற்கு, ஒன்றுகூடி பணியாற்றுவதற்கு மிகவும் செயற்திறன்மிக்க வழியை அரசாங்கங்கள் பரிசீலித்து வருகின்றன. இந்த நடவடிக்கைகள் இந்த ஆலோசனை அறிக்கையில் இருக்கும் வேறு முன்மொழிவுகளைப் பூர்த்திசெய்ய முயல்கின்றன அத்துடன் கல்வி, குடும்பம் மற்றும் வீட்டு வன்முறை சேவைகளுடன் விழிப்புணர்வு-தூண்டல் செயற்பாடுகள், கட்டாயதிருமணம் சார்ந்த சேவைகள், பிற முன்னணி பதிலளிப்பவர்கள் மற்றும◌் நீதித்துறை போன்றவை உள்ளடங்கலாம். கலாசாரரீதியாகப் பொருத்தமானதாகவும், கட்டாயத்திருமணத்தால் பாதிக்கப்பட்ட சமூகத்தினருடன் மேம்படுத்தப்பட்ட புதியதொரு கல்வி மற்றும் விழிப்புணர்வு-எழுச்சிபெறும் நடவடிக்கைகள் தேவையாகும்.

ஆஸ்திரேலிய அரசாங்க- நிதியுதவியளிக்கப்பட்ட FMSSP 2025இல் ஆரம்பித்து, பாதிக்கப்பட்ட சமூகங்களில் கல்வி மற்றும் விழிப்புணர்வில் முக்கிய பங்கு வகிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது உள்ளூர் சமூகங்களில் உறவுகளையும், வலையமைப்பையும் தெரிவுசெய்யப்பட்ட வழங்குபவர் கட்டிவளர்ப்பார் அத்துடன் இலக்குவைக்கப்பட்ட கல்வி, நடத்தை மாற்றத்தை வளர்த்தல், கலாசாரரீயாகப் பொருத்தமான முறையில் கட்டாயத்திருமணம் குறித்து விழிப்புனர்வு- -தூண்டல் மற்றும் குடும்ப உறவுமுறையைக் கட்டிவளர்ப்பார். முன்கூட்டிய தலையீடு மற்றும் கட்டாயத்திருமணத்தைத் தடுத்தல் போன்றவற்றிற்கு ஆதரவு வழங்குவதற்கு, கல்வி மற்றும் விழிப்புணர்வு- தூண்டல் ஆகியவற்றினை மேலும் கருத்தில்கொள்ள18 மாத செயற்பாடு,

சந்தர்ப்பம் ஒன்றினை வழங்குதலைத்தொடர்ந்து, FMSSP மதிப்பீடு செய்யப்படும்.

## பின்னூட்டத்திற்கான முன்மொழிவு

கீழேயுள்ள பட்டியல் அரசாங்கங்கள் முன்னேறக்கூடிய செயற்பாடுகளை எடுத்துக்காட்டுகிறது. FMSSP நிறுவனத்தின் கற்றல் மற்றும் கட்டாயத்திருமணத்தை நிவர்த்திசெய்ய தற்போதுள்ள செயற்பாடுகளிலிருந்து கற்றுக்கொள்வதன்மூலம் கட்டாயத்திருமண கல்வியை வலுப்படுத்தப் பணியாற்றல் மற்றும் விழிப்புணர்வு-தூண்டல் மூலம் நிவர்த்திசெய்யப்படும்.

முக்கிய செயற்பாடுகள் பின்வருவனவற்றை உள்ளடக்கலாம்:

- கட்டாயத்திருமணத்தின் அறிகுறிகளை அடையாளம் காண்பது மற்றும் கலாசார ரீதியாக பொருத்தமான, அணுகக்கூடிய அத்துடன் அதிர்ச்சியான தகவலறிந்த பதில்கள் உட்பட, எவ்வாறு பதிலளிப்பது என்பது அடங்கலாக குறிவைக்கப்பட்ட விழிப்புணர்வு-தூண்டல்
- சமூகக் கல்வி மற்றும் விழிப்புணர்வைத் தூண்டுதல், மற்றும்
- குடும்ப மற்றும் வீட்டு வன்முறை சேவை வழங்குபவர்கள் உட்பட, முன்னணி பதிலளிப்பவர்களுக்கான இலக்குவைக்கப்பட்ட விழிப்பணர்வு- தூண்டல் மற்றும் கல்வி.

**ஆலோசனை கேள்விகள்**

5. என்ன தலைப்புகள், கல்வி அல்லது விழிப்புணர்வு- தூண்டல் செயற்பாடுகளில் கவனம் செலுத்தக்கூடும்?
6. கட்டாயத்திருமணத்தால் பாதிக்கப்பட்ட சமூகதில் கல்வி மற்றும் விழிப்புணர்வைத் தூண்டுவதில் யார் ஈடுபடவேண்டும்?
7. சமூகத்தில் கல்வி மற்றும் அதிகரிக்கப்பட்ட கட்டாயத்திருமணம் குறித்த விழிப்புணர்வு தேவைப்படும் குழுக்கள் எவை (உதாரணமாக, காவல்துறை போன்ற முன்னணி பணியாளர்கள், சிறுவர் பாதுகாப்பு மற்றும்/அல்லது சமூகத்தில் இருக்கும் குறிப்பிட்ட கூட்டாளிகள்)

# பகுதி 3- சிவில் பாதுகாப்புகள் மற்றும் பரிகாரங்களை வலுவூட்டல்

## தேடப்பட்ட பதில்கள்

கட்டாயத்திருமணத்தில் அல்லது அதன் ஆபத்தில் இருக்கும் மக்களுக்குத் தலையிடும் மற்றும் தடுக்கும் தெரிவுகளை மேம்படுத்தப்பட்ட சிவில் பாதுகாப்புகள் மற்றும் பரிகாரங்கள் வழங்குகின்றன.

## சுருக்கம்

தற்சமயம், கட்டாயத்திருமணத்தில் அல்லது அதன் ஆபத்தில் இருக்கும் மக்களுக்கான சிவில் பாதுகாப்பு பொறிமுறை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது, கட்டாயத்திருமணத்தின் சூழலில் தயாரிக்கப்படவில்லை, மற்றும் அதிகாரஎல்லைகளுக்கிடையில் வேறுபடுகிறது. கட்டாயத்திருமணத்தில் அல்லது அதன் ஆபத்தில் இருக்கும் மக்களுக்கு ஒருவேளை மிகவும் பயனுள்ள இந்த பாதுகாப்புகளை முன்மொழிவின் இந்தப்பகுதி கருதுகிறது. பாதுகாப்பு கட்டளைகளை உள்ளடக்கக்கூடிய செயல்கள் மற்றும் யாருக்கு இந்தப் பாதுகாப்பு கட்டளைகள் பொருந்தும் என்பதைக் கருத்தில் கொள்வதும் இதில் அடங்கும்

### *சிவில் பாதுகாப்புகள் மற்றும் பரிகாரங்கள் என்றால் என்ன?*

சிவில் பாதுகாப்புகள் மற்றும் பரிகாரங்கள் என்பது, குறித்த ஒரு வழியில், செயற்படுமாறு அல்லது செயற்படக்கூடாதென மக்களை அல்லது நிறுவனங்களைச் சட்டரீதியாகக் கேட்கக்கூடிய நீதிமன்றினால் இடப்பட்ட கட்டளைகளாகும். எதிர்கால வன்முறையிலிருந்து பாதிக்கப்பட்ட-உயிர்பிழைத்தோரை சிவில் பாதுகாப்புகள் பாதுகாக்கலாம் அத்துடன் காவல்துறையால் ஆரம்பிக்கப்படவேண்டிய தேவையில்லை. கட்டளையிடப்பட்ட நபருக்கு எதிராக நிபந்தனைகள் அல்லது கட்டுப்பாடுகள் விதிக்கப்படலாம். நேர-உணர்திறன்மிக்க பாதுகாப்புகளை, அவை தேவைப்படும் ஆட்களுக்கு வழங்கி, விரைவாக நீதிமன்றம் ஒன்றினால் சிவில் பாதுகாப்பு அடிக்கடி கட்டளையிடப்படலாம்.

### *என்ன சிவில் பாதுகாப்புகள் தற்போது கிடைக்கும்?*

குடும்பம், வீட்டு மற்றும் தனிப்பட்ட வன்முறையிலிருந்து பாதிக்கப்பட்ட-உயிர்பிழைத்தோருக்குப ் பாதுகாப்பை வழங்கும் சிவில் பாதுகாப்பு கட்டமைப்புகள் அனைத்து அதிகாரஎல்லைகளினுள்ளும் கிடைக்கும். பாதுகாக்கப்பட்ட நபருக்குத் தீங்கு விளைவிக்காமல் அல்லது பாதுகாக்கப்பட நபரை தொடர்புகொள்ளாமல் பிரதிவாதி ஒருவரை தடுத்தல் உட்பட, இந்தக் கட்டமைப்பு பல்வேறுபட்ட பாதுகாப்புகளை வழங்குகிறது. கட்டாயத்திருமணத்தில் அல்லது அதன் ஆபத்தில் இருக்கும் ஆட்களுக்கு இந்தப் பாதுகாப்புகள் பொருத்தமாக இருக்கலாம்.

ஆயினும், கட்டாயத்திருமணத்தில் அல்லது அதன் ஆபத்திலிருக்கும் ஆட்களுக்கு தற்போதுள்ள சிவில் பாதுகாப்புகள் குறித்த விண்ணப்பங்களில் இடைவெளிகளும் மற்றும் மட்டுப்பாடுகளும் இருக்கின்றன. உதாரணமாக, மட்டுப்படுத்தப்பட்ட சூழ் நிலைகளில் மாத்திரம், மற்றும் குறிப்பிட்ட குடும்பம்

அல்லது நெருங்கிய பங்காளர் சூழலில், அனைத்து அதிகாரஎல்லைகள் முழுவதும் வேறு வகையான பாதுகாப்புகள் கிடைக்கும்.

*Family Law Act 1975* (Cth) இன் கீழ், ஒரு குழந்தைக்கான பெற்றோருக்குரிய ஏற்பாடுகளைக் கையாளுவதற்கு பெற்றோர் சம்பந்தப்பட்ட கட்டளையை நீதிமன்றம் பிறப்பிக்கலாம். பராமரிப்பு, நல்வாழ்வு அல்லது குழந்தையின் மேம்பாடு பற்றிய அனைத்து கட்டளைகளும் இதில் அடங்கும். குறித்த சில சந்தர்ப்பங்களில், ஒரு குழந்தை இருக்கும் இடம் பற்றிய தகவல்களை நீதிமன்றுக்கு வழங்குமாறு ஒருவரை அல்லது ஒரு நிறுவனத்தைக் கேட்கக்கூடிய இடத்திற்கான கட்டளை (a location order) ஒன்றினை நீதிமன்றம் பிறப்பிக்கலாம். சர்வதேச பயணத்தைத் தடுப்பதற்கு பெற்றோருக்கான கட்டளை(parenting order) பிறப்பிக்கப்பட்டால், விமான நிலைய கண்காணிப்பு பட்டியலில் (Airport Watch List)குழந்தையினுடைய விபரங்களைப் பதிவிடுமாறு AFP க்கு விண்ணப்பம் செய்யலாம். பிரயாணி பகுப்பாய்வு அனுமதி மற்றும் வெளியேற்ற அமைப்பு (PACE) எச்சரிப்பதை இது உறுதிப்படுத்தும், இது குழந்தை ஒன்று ஆஸ்திரேலியாவை விட்டுச்செல்வதைத் தடுப்பதற்கான ஒரு எச்சரிக்கையாகும். கட்டாயத்திருமண நோக்கத்திற்காக ஒரு குழந்தை கடல்கடந்து கூட்டிச்செல்லபடுவதைத் தடுப்பதற்கு இது பயன்படலாம்.

ஆயினும், பெற்றோர் கட்டளைகளானது குழந்தைகளை அவர்களுடைய பெற்றோர்கள் அல்லது பராமரிப்பாளர்கள் தமது உறவை நிர்வகிக்க வடிவமைக்கப்பட்டுள்ளது, மேலும் வயதானோருக்குப் பாதுகாப்பு வழங்க முடியாது. விமான நிலைய கண்காணிப்புப் பட்டியலில் வயதுவந்தோரை வைக்க முடியாது என்பதும் இதன் அர்த்தமாகும்.

பகுதி 3-இல் இருக்கும் முன்மொழியப்பட்ட மேம்பாடுகள் கிடைக்கக்கூடிய சிவில் பாதுகாப்புகளில் உள்ள இடைவெளிகளை நிவர்த்திசெய்யவதையும், கட்டாயத்திருமணத்தில் அல்லது அதன் ஆபத்தில் இருக்கும் மக்களுக்கான மிகவும் சீரான மற்றும் நோக்கத்திற்குப் பொருத்தமான பாதுகாப்பை அடைவதையும் இலக்காகக் கொண்டுள்ளன.

### *கட்டாயத்திருமணத்திற்கான உறுதியான பாதுகாப்புகள் மற்றும் பரிகாரங்கள் எங்களுக்கு ஏன் தேவை?*

கட்டாயத்திருமணத்திற்கான குற்றவியல் நீதிக்கான பிரதிபலிப்பு, இந்த நடத்தை ஆஸ்திரேலியாவில் ஏற்றுக்கொள்ளப்படாது என்ற ஒரு தெளிவான செய்தியை அனுப்பி, ஒரு தடைபோல, ஒரு முக்கிய பங்கினை வகிக்கிறது. பாதிக்கப்பட்ட-உயிர்பிழைத்தோர் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வுக்காக, தடுக்கும் அத்துடன் கால முக்கியத்துவம்கொண்ட விளைவுகளை அடையக்கூடிய நடைமுறைச் சாதனங்களை வழங்கி, கட்டாயத்திருமணத்திற்கான வலிமையான சிவில் பாதுகாப்புகள் மற்றும் பரிகாரங்கள், குற்ற நீதி பிரதிபலிப்பைப் பூர்திசெய்யும். காவல்துறை மற்றும் வழக்குத்தொடுநர் போன்றோருக்கான நீண்ட, சிக்கலான தன்மைகொண்ட ஆட்கடத்தல் மற்றும் நவீன அடிமைத்தன விடயங்கள் பற்றி ஆஸ்திரேலிய ஆய்வு சுட்டிக்காட்டியுள்ளது. மேலும், AFP எடுக்கக்கூடிய ஆரம்ப தலையீட்டு

நடவடிக்கைகள் மற்றும் அது வழங்கக்கூடிய பாதுகாப்புகள் போன்றவை மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

சர்வதேசரீதியாக, கட்டாயத்திருமணத்தை நிவர்த்திசெய்ய உதவுவதற்கு சிவில் பாதுகாப்புகளைப் பாவித்த நாடொன்றின் உதாரணத்தை ஐக்கிய இராச்சியம் (UK) வழங்குகிறது. 2008 இல், கட்டாய திருமண பாதுகாப்பு கட்டளைகளை UK அறிமுகப்படுத்தியது. (FMPOs). பங்குதாரர்களின் சிபாரிசுகளிலிருந்து FMPO களின் அறிமுகம் கட்டாயத்திருமணத்தைச் சமாளிக்க , குற்றமுறையான தடைகளைக் காட்டிலும், மிகவும் பொருத்தமான வழி சிவில் பாதுகாப்புகள் எனக் கூறுகிறது.
பல பாதிக்கப்பட்ட- உயிர்பிழைத்தோர் தமது குடும்பத்தினர் வழக்கில் ஈடுபட்டிருப்பதைப் பார்க்க விரும்பமாட்டார்கள், இதன் விளைவாகக் குறைந்தளவு மக்கள் உதவியை நாடுகிறார்களென இந்த பங்குதாரர்கள் விவாதிக்கிறார்கள். கிட்டத்தட்ட, 2014 தொடக்கம் 2023 வரை, இங்கிலாந்து, மற்றும் வேல்ஸ்-இல் ஒவ்வொரு ஆண்டும் 200-250 FMPO கள் வழங்கப்பட்டிருப்பதுடன், ஒரு உறுதியான ஏற்றத்தை UK -இல் உள்ள ஆய்வுகள் காண்பிக்கின்றன.

ஆஸ்திரேலியாவில், பாதிக்கப்பட்ட-உயிர்பிழைத்தோர் கட்டாயத்திருமணத்தைத் தவிர்க்க அல்லது அதிலிருந்து வெளியேற உதவுவதற்கு கட்டாயத்திருமணத்தினால் பாதிக்கப்பட்ட-உயிர்பிழைத்தோர் எதிர்கொள்ளும் ஆபத்துகள் மற்றும் சிவில் பாதுகாப்பு கட்டளைகள் போன்ற சட்ட நடவடிக்கைகளின் பயன்களை சிவில் சமூக நிறுவன கல்வி ஆய்வுகளும், அறிவுரைகளும் விபரிக்கின்றன. . குற்ற தண்டனைத்தீர்ப்புக்குத் தேவைப்படும் குற்றத்தை நிரூபிக்கும் தரத்துடன் ஒப்பிடும்போது (நியாயமான சந்தேகத்திற்கு அப்பால்) குடிமக்கள் பாதுகாப்புகள் நிரூபிப்பதற்கு குறைந்தளவு தரம் தேவைப்படும் காரணத்தால் (நிகழவுகளின் சம நிலையில்) சிவில் பாதுகாப்புகள் மேலதிக அம்சங்களை வழங்குவதாக ஆய்வுகள் வாதிடுகின்றன. UK-இல் பங்குதாரர்களின் பரிந்துரைகளுக்கு இணங்க, கட்டாயத்திருமணத்தை எதிர்கொள்ளும் மக்களுடனான ஆஸ்திரேலிய ஆய்வும் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் மற்றபடி கைதுசெய்யப்பட்டு, வழக்குத் தொடரப்படலாமென பயப்படக்கூடிய சிலருக்கு சிவில் கட்டளைகள் விரும்பக்கூடியதொரு சட்டப்படியான விருப்பத்தேர்வாகுமெனவும் கருத்துத்தெரிவிக்கிறது.

கட்டாயத்திருமணம் மற்றும் நவீன அடிமைத்தனத்தின் ஏனைய வடிவங்களுக்கு ஆஸ்திரேலியாவின் பிரதிபலிப்பை முந்தய பாராளுமன்ற விசாரணைகள் பரிசீலனைசெய்துள்ளன. கட்டாயத்திருமணத்தில் அல்லது அதன் ஆபத்தில் இருக்கும் மக்களைப் பாதுகாப்பதற்கு சட்டரீதியான கட்டமைப்பில் இடைவெளிகளை இந்த விசாரணைகளுக்கான பல சமர்ப்பிப்புகள் எடுத்துகாட்டியுள்ளன. குழந்தைகளுக்கான சில பாதுகாப்புகள் கிடைக்ககூடியதாக இருக்கும்வேளை, வயதுவந்தோருக்கு அதையொத்த பாதுகாப்புகள் கிடைப்பதில்லை என்பதை அவை வலியுறுத்துகின்றன.

இந்த சமர்ப்பிப்புகளில், வயது, இடம், போன்றவற்றைக் கருத்தில் கொள்ளாது பாதிக்கப்பட்ட-உயிர்பிழைத்தோருக்குப் பாதுகாப்புகள் கிடைப்பதை சிவில் கட்டமைப்பின் அறிமுகத்திற்கான கட்டமைப்பு உறுதிசெய்வதை பங்குதாரர்கள் எடுத்துக்கூறினார்கள் அத்துடன் 18 வயதிற்கும் மேற்பட்ட ஆட்களுக்கு கட்டாயத்திருமணம் தொடர்பிலான கட்டளைகளை நீடிப்பதற்கு பொது அரசாங்கத்திற்கு விசாரணைகளின் இறுதி அறிக்கை சிபாரிசு செய்துள்ளது.

கட்டாயத் திருமணத்தில் அல்லது அதன் அபாயத்தில் இருக்கும் மக்களுக்கு கால முக்கியத்துவம்வாய்ந்த முடிவுகளைப் பெற்றுக்கொள்ளக்கூடிய தலையீடு மற்றும் தடுப்பு அம்சங்களை மேம்படுத்துவதன் மூலம் இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள முன்மொழிவுகள், ஆஸ்திரேலியாவில் தற்போதுள்ள கட்டாயத் திருமணத்திற்கான பிரதிபலிப்பைப் பூர்த்திசெய்யும்.

சிவில் பாதுகாப்புகள் மற்றும் பரிகாரங்கள் என்பன பலமான ஆதரவு சேவை அமைப்பினால் பாதுகாக்கபடவேண்டும் அதைப்போல கட்டாயத்திருமணத்தால் மிகவும் பாதிக்கப்பட்ட சமூகங்களுடன், கலாசாரத்திற்குப் பொருத்தமான கல்வி மற்றும் விழிப்புணர்வு-தூண்டும் முயற்சிகள் பாதுகாக்கப்பட வேண்டுமென UK-இனுடைய அனுபவம் மற்றும், இன்றுவரையுள்ள பங்குதாரர்களின் பின்னூட்டம் காண்பிக்கிறது. குடும்பம் மற்றும் வீட்டு வன்முறை சேவை அமைப்பினூடாக, அத்துடன் ஆதரவுகள், கல்வி மற்றும் விழிப்புணர்வு-தூண்டும் செயற்பாடுகள் குறித்த கருத்துகளை இந்த ஆலோசனை அறிக்கை நாடுகிறது. கட்டாயத்திருமணத்தில் அல்லது அதன் ஆபத்தில் இருப்பவர்களுக்குக் கிடைக்கக்கூடிய ஆதரவுகளை வலுவூட்டுவதற்கு குறிப்பிடக்கூடியயளவை இந்தப் புதிய FMSSP யும் வழங்கும்.

## பின்னூட்டத்திற்கான முன்மொழிவு

கட்டாயத்திருமணத்திற்கான மேம்படுத்தப்பட்ட சிவில் பாதுகாப்புகள் மற்றும் பரிகாரங்களின் முன்மொழியப்பட்ட முக்கிய அம்சங்கள் அதே போல, பொதுச் சட்டதினூடாக அல்லது தற்போதுள்ள குடும்ப மற்றும் வீட்டு வன்முறை கட்டமைப்புக்குள் மேம்பாடுகளை ஒருங்கிணைப்பதன்மூலம் இவற்றை நிறுவுவதற்கான விருப்பங்கள் குறித்த பின்னூட்டத்தை கீழேயுள்ள பிரிவுகள் நாடுகின்றன, முன்மொழியப்பட்ட முக்கிய அம்சங்கள் மற்றும் நிறுவுவதற்கான விருப்பங்கள் என்பன அனைத்து ஆஸ்திரேலிய அரசாங்கங்களால் கலந்துரையாடுவதற்கும் அத்துடன் மேலும் பரிசீலிப்பதற்கும் ஆகும்.

### மேம்படுத்தப்பட குடிமக்கள் (சிவில்) பாதுகாப்புகள் மற்றும் பரிகாரங்களை உறுதிசெய்வதற்கான விருப்பதேர்வுகள்

கட்டாயத்திருமணத்திற்காக, மேம்படுத்தப்பட்ட குடிமக்கள் பாதுகாப்புகள் மற்றும் பரிகாரங்களை உறுதிசெய்வதற்கு விருப்பத்தேர்வுகளை ஆஸ்திரேலிய அரசாங்கம் பரிசீலித்துவருகிறது. இரண்டு விருப்பத்தேர்வுகள் பின்வருவனவற்றுள் அடங்கலாம்:

- **தெரிவு A** : மேம்படுத்தப்பட்ட பாதுகாப்புகளைத் தற்போதுள்ள பொது, மாநில மற்றும் பிரதேச குடும்ப மற்றும் வீட்டு வன்முறை கட்டமைப்பினுள் ஒருங்கிணைப்பதாகும்.
    - குடும்பம் மற்றும் வீட்டு வன்முறை அல்லது பிற தொடர்புபட்ட கட்டமைப்புகளில் பொருத்தமானதாக கட்டமைப்புகளை ஒருங்கிணைக்க அதிகாரஎல்லைகளுக்கான மேம்படுத்தப்பட்ட பாதுகாப்புகளின் பகிரப்பட்ட கொள்கைகள் அல்லது அம்சங்களை உருவாக்குதல் அல்லது ஒப்புக்கொள்ளல் ஆகியவை இதில் அடங்கும். **அல்லது**
- **தெரிவு B:** மாநில மாற்றும் பிரதேச அரசாங்க நிறைவேற்று ஆதரவுடன், பொது(காமன்வெல்த்)அரசாங்க சட்டத்தினூடாகப் புதிய பாதுகாப்புகளை நிறுவுதல்

### *தெரிவு A : குடும்பம் மற்றும் வீட்டு வன்முறை கட்டமைப்புகளுடன் ஒருங்கிணைத்தல்*

தற்போதுள்ள நிபுணத்துவம் மற்றும் அமைப்புகளை உருவாக்கி, ஏற்கனவே உள்ள பொது, மாநில, பிரதேச குடும்பம் மற்றும் வீட்டு கட்டமைப்புகளில் மேம்படுத்தப்பட்ட சிவில◌் பாதுகாப்புகள் மற்றும் பரிகாரங்களை ஒருங்கிணைப்பதற்கு தெரிவு A நாடுகிறது.

கடந்த காலத்தில் ஒருவிதமாக சிறுவர்களையும் வயதானவர்களையும் திருமணத்திற்குக் கட்டாயப்படுத்துவதற்காக தவறான நடத்தைகளைத் துன்புறுத்துவோர் பயன்படுத்துவதுடன், கட்டாயத்திருமணம் மற்றும் குடும்பம் மற்றும் வீட்டு வன்முறை ஆகிய இரண்டிற்குமிடையே இணைப்பினை ஆய்வுகள் காட்டுகிறது. தற்போதுள்ள குடும்பம் மற்றும் வீட்டு வன்முறை கட்டமைப்புகள் மற்றும் அனுபவம் போன்றவை குறித்து இணைப்புகள் பிரதிபலிப்பதற்கு இந்த விருப்பத்தேர்வு நாடுகிறது. அனைத்து அதிகார எல்லைகளுக்கிடையிலேயும் குடும்பம் மற்றும் வீட்டு வன்முறை கட்டமைப்புகள் வித்தியாசப்படுகின்றன. அத்துடன் சில அதிகாரஎல்லைகளில், கட்டாய திருமணத்திற்கான சிவில் பாதுகாப்புகளை மாற்று கட்டமைப்பில் ஒருங்கிணைத்தல் மிகவும் பொருத்தமாக இருக்கலாம். உதாரணமாக, தஸ்மேனியாவில் குடும்ப வன்முறை சட்டம் (*Family Violence Act 2004* (Tas) ) ஒருவருடைய துணைவர் அல்லது பங்காளரால் செய்யப்பட்ட நடத்தையை மாத்திரம் குறிப்பிடுகிறது மேலும் மாற்றாகக் கட்டமைப்பு/கள் கட்டாயத்திருமணத்திற்கான சிவில் பாதுகாப்புகளைப் பொதிப்பதற்கு சிறப்பாக வைக்கப்பட்டிருக்கலாம்.

சிறப்புவாய்ந்த நீதிமன்றங்கள், பாதுகாப்புகள், மற்றும் உதவி உட்பட, விசாலமான குடும்பம் மற்றும் வீட்டு வன்முறை ஆதரவுகள் போன்றவற்றினுள் இணைப்பதற்கு ஒரு வாய்ப்பினை ஏற்கனவேயுள்ள அமைப்புடன் ஒருங்கிணைப்பு வழங்கும் அவர்களுக்குத் தேவைப்படும் பல்வேறு ஆதரவுகள் மற்றும் தேவை போன்றவற்றை அணுகுவதற்கு வேறுபட்ட நீதிமன்றங்கள் மற்றும் அமைப்புகள் ஊடாக போவதற்கு கட்டாயத்திருமணத்தில் அல்லது அதன் ஆபத்தில் இருக்கும் ஆட்களுக்கு

தற்போதுள்ள அமைப்புகளைக் கட்டியெழுப்புவதும் ஆபத்தைக் குறைக்கலாம்.

மேம்படுத்தப்பட்ட பாதுகாப்புகள் மற்றும் பரிகாரங்களை அமுல்படுத்துவதற்கு அந்தக் கட்டமைப்புகளைப் பொருத்தமாகத் திருத்தம் செய்வதற்குச் சம்மதிப்பதற்கு அனைத்து ஆஸ்திரேலிய அரசாங்கங்களுக்கும் தேவைப்படும் குடும்பம் மற்றும் வீட்டு வன்செயல் கட்டமைப்புகளில் கட்டாய திருமண பாதுகாப்புகளை இணைத்தல் ஒவ்வொரு சட்டவரம்பினுள்ளும் சட்டத்திருத்தத்தை இந்த மாதிரி கேட்கும் (பொருத்தமான இடத்தில்),இது வேறுபட்ட சட்டவாக்க கட்டமைப்புகள் மற்றும் அதிகாரஎல்லைகள் ஊடாக நெருங்குதல் போன்றவற்றால், சிக்கலாக்கப்படலாம். ,

காவல்துறை அதிகாரிகள் அடங்கலாக பிற முன்னணி உத்தியோகத்தர்கள், சேவை வழங்குபவர்கள், நீதிமன்றங்கள் மற்றும் நீதித்துறை போன்றவற்றுடனும், சமூகங்களுடனும் அத்துடன் ஆற்றல் வாய்ந்த கல்வி, விழிப்புணர்வு-தூண்டல் மற்றும் அமுலாக்கத்திற்கு ஆதரவளிக்க ஆற்றலை வளர்த்தல் போன்றவையும் இருக்கவேண்டும். பொதுஅரசாங்கம் மற்றும் மாநில, பிரதேச அரசாங்கங்கள் ஆகிய இரு மட்டங்களில், வேறுபட்ட முகவர்கள் மற்றும் சேவை வழங்குபவர்கள் இடையில் இணப்பை வலுவாக்கப்பட்ட ஒருங்கிணைப்பு முக்கியம் ஆகும்.

அதிகாரஎல்லைகளிடையே தகவல் பரிமாற்றம் அவசியமாகும் அத்துடன் தேசிய வீட்டு வன்முறை கட்டளைத் திட்டத்தினூடாக (National Domestic Violence Order Scheme (NDVOS)) ஆதரவளிக்கப்படலாம். இது, ஆஸ்திரேலிய மாநிலம் அல்லது பிரதேசத்தில் பிறப்பிக்கப்பட்ட வீட்டு வன்முறை கட்டளைகள் அனைத்தும் ஆஸ்திரேலியா முழுவதும் தானாக அங்கீகரிக்கப்படவும், நிறைவேற்றக்கூடியதாகவும் இருக்கும்.

### *பகிரப்பட்ட கோட்பாடுகள்*

முதல் தருணத்தில், அவர்களுடைய குடும்பத்தில் மற்றும் வீட்டு வன்முறைக் கட்டமைப்பில், அல்லது பிற தொடர்புடைய கட்டமைப்புகளில் பொருத்தமாக அதிகாரஎல்லைகள் ஒன்றிணைக்கும் மேம்படுத்தப்பட்ட பாதுகாப்புகளின் பகிரப்பட்ட கோட்பாடுகள் அல்லது அம்சங்களின் மேம்பாட்டினூடாக விருப்பதேர்வு A முன்னேற்றப்படலாம்.

கட்டாயத்திருமண சிவில் பாதுகாப்புகள் மற்றும் பரிகாரங்கள் போன்றவற்றிற்கான மேம்பாட்டிற்கு, கொள்கைகள் அல்லது அம்சங்கள் அதிகார வரம்புகள் எல்லாவற்றினதும் அணுகுமுறையை ஆதரிக்கும். இந்த தகவல்அறிக்கையில் பகுதிகள் 1, 2 இல் இருக்கும் முன்மொழிவுகளின் அமுலாக்கலுக்கு அவை வழிகாட்டவும் கூடும்.

அமுலாக்கத்தின் நெகிழ்வுத்தன்மையை விடாது வைத்துக்கொண்டிருக்கும் அதேவேளை, அத்தகைய தேவைகளை நிவர்த்திசெய்வதற்கு, மேம்படுத்தப்பட்ட சிவில் பாதுகாப்புகள் மற்றும் பரிகாரங்களின் கொள்கைகள் அல்லது அம்சங்களுக்கு இணங்குவதன்மூலம் அரசாங்கங்கள்

உறுதிபூண்டுள்ளன. குடும்ப மற்றும் வீட்டு வன்முறை கட்டமைப்புகள், புதிய கட்டமைப்புகளை நிறுவுதல் போன்ற தற்போதுள்ள பொறிமுறைகளைப் பாவிப்பதற்கு அதிகாரஎல்லைகள் தெரிவுசெய்யக்கூடும் அல்லது கொள்கைகளைப் பொதிக்கவும், நிவர்த்திசெய்யவும் வேறு விரும்பத்தக்க வழிகளைப் பயன்படுதலாம்.

### *தெரிவு B: பொது(நலவாய) அரசாங்கத்தின் தனியான சட்டம்*

பொது அரசாங்கத்தின் தனியான சட்டமொன்றின் ஊடாக ஒரு புதிய கட்டாயத்திருமண கட்டளையை தெரிவு B நிறுவும். தெரிவு A இல் முன்மொழியப்பட்டது போல, ஒரேமாதிரியான பாதுகாப்பு மறுமொழிகளைப் பெறுவதற்கு அது விரும்பும்.

அனைத்து அதிகாரவரம்புகள் முழுவதும் சமமாகவும், ஒரேமாதிரியாகவும் பிரயோகிக்கப்படும் தேசிய சட்டவாக்கத்தை நிறுவுவதற்கு காமன்வெல்த்-இன் தனியான சட்டம் வாய்ப்பு ஒன்றினை வழங்குகிறது. கட்டாயத்திருமணத்தில் அல்லது அதன் ஆபத்தில் இருக்கும் மக்களின் தடை மற்றும் பாதுகாப்பு தேவைகளை நிவர்த்திசெய்யும் கட்டளைகளைப் பிறப்பிக்க இந்தச் சட்டம் நீதிமன்றங்களை அனுமதிக்கும்.

தெரிவு A இல் உள்ளதைப்போல், அணுகக்கூடியதாவும், காலத்திற்குத் தகுந்தபடியும், மற்றும் செயல்திறன் மிக்கதாகவும் காமன்வெல்த் கட்டளைகள் இருப்பதை உறுதிசெய்வதற்கு சகல அதிகாரஎல்லைகளிடையேயும், கூட்டுறவையும், ஒருங்கிணைப்பையும் தெரிவு B இன்றியமையாததாக்கும். உதாரணமாக, காமன்வெல்த் கட்டளைகளுக்காக விண்ணப்பங்களை விசாரணைசெய்வதற்கு மாநில,பிரதேச நீதிமன்றங்களுக்கு அதிகாரத்தை அளிப்பதன்மூலம் இதை அடையமுடியும். NDVOS குறித்து பரிசீலனைசெய்வது அடங்கலாக, ஒருதலைப்படுத்தவும், பயன்மிக்க ஒருங்கிணைப்பிற்குமாக அதிகாரவரம்புகளுக்கிடையே செயற்திறன்மிக்க தொடர்பு மற்றும் அதிகாரஎல்லைகள் முக்கியமாகும். அதேபோல, கட்டளைகளை கையளித்தல், மற்றும் நிறைவேற்றுதலில் மாநிலம் மற்றும் பிரதேச காவல்துறையின் பங்கை, தெரிவு B ஆலோசிக்கலாம்.

தேசியரீதியில் சீரான நிலையில் இருக்கும் வேளையில், பாதுகாப்பு மற்றும் ஆதரவை நாடுவதற்குப் பல்வேறு அமைப்புகளை அணுகுவதற்கு இந்த மாதிரி விண்ணப்பதாரர்களை ஒருவேளை கேட்கக்கூடும். இவற்றில், தெளிவான சிபாரிசு நடைமுறை, கல்வி, விழிப்புணர்வு-தூண்டல், காவல் அதிகாரிகள், பிற முன்னணி உத்தியோகத்தர்கள், சேவை வழங்குபவர்கள், நீதிமன்றுகள் மற்றும் நீதித்துறை, சமூகத்துடன், ஆபத்தைத் தணிப்பதற்கு இவை மீண்டும் முக்கியாமாக இருக்கலாம்.

**ஆலோசனை கேள்விகள்**

8. ஆஸ்திரேலியாவில் கட்டாயத்திருமணத்திற்குப் பதிலளிக்கவும், தவிர்க்கவும் கிடைக்கும் தற்போதுள்ள சட்ட பாதுகாப்புகளில் இடைவெளிகள் இருப்பதாக நீங்கள் நினைக்கிறீர்களா? அப்படியானால், அவ்வாறான இடைவெளிகள் என்ன?
9. குடிமக்கள் சட்ட பாதுகாப்புகளை வலுப்படுத்துவதற்கு இரண்டு விருப்பத்தேர்வுகளை இந்தக் கட்டுரை விவாதிக்கிறது: விருப்பத்தேர்வு A (தற்போதய சட்டத்தை மேம்படுத்தவும் ஒருவேளை பகிரப்பட்ட கொள்கைகளூடாக), விருப்பத்தேர்வு B(தனியான பொதுச்சட்டத்தை அறிமுகப்படுத்துங்கள்). இந்த இரண்டு செயலாக்க விருப்பத்தேர்வுகளில் எது மிகவும் பயனுள்ளது, ஏன்? முக்கிய ஆபத்துகள் யாவை? கருத்தில் கொள்ள வேண்டிய வேறு விருப்பத்தேர்வுகள் உள்ளனவா?
10. தெரிவு A இன் கீழ், கட்டாயத்திருமண சிவில் பாதுகாப்புகளை வலுவாக்குவதற்குப் பயன்படுத்தக்கூடிய குடும்பம் மற்றும் வீட்டு வன்முறைக் கட்டமைப்புகளுக்கு மாற்றான சிவில் பாதுகாப்பு கட்டமைப்புகள்? இருக்கின்றனவா?

## மேம்படுத்தப்பட்ட குடிமக்கள் பாதுகாப்புகளும், பரிகாரங்களும்- முக்கிய அம்சங்கள்

*கட்டளைகளுக்கான காரணங்கள்*

'கட்டளைகளுக்கான அடிப்படைக் காரணங்கள்" என்பது ஒரு நீதிமன்றம் கட்டளை ஒன்றினை வழக்குவதற்கான காரணம் ஆகும் அத்துடன் இவை சட்டத்தில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன.

உதாரணமாக, தனிப்பட்ட நபர் ஒருவருக்கு சிவில் பாதுகாப்புகளை வழங்குவதற்குப் போதுமான காரணங்களாக இருப்பதற்கு, வன்முறையின் இருப்பு, அல்லது எதிர்பார்ப்பு போன்றவற்றை மாநில மற்றும் பிரதேச சிவில் பாதுகாப்பு கட்டமைப்புகள் பொதுவாக கருதுகின்றன.

கட்டாயத்திருமணம் -தொடர்பான சிவில் பாதுகாப்புகளுக்கான கட்டளைகளுக்கான சாத்தியப்படக்கூடிய காரணங்கள் என்பது ஒருவர் தான் திருமணத்திற்கு கட்டாயப்படுத்தப்படுவேனெனப் பயப்படுவதற்கு நியாயமான காரணங்கள் இருப்பதாக நிகழ்வுகளின் சமனிலையில்(on the balance of probabilities) நீதிமன்றம் திருப்திப்படுதலை உள்ளடக்கலாம். இதற்கான காரணங்கள் பின்வருவன ஆகும்:

- அந்த நபருக்குத் தீங்குஏற்படுதல் குறித்த பயம் (அல்லது சகோதரர் போன்ற இன்னொருவருக்கு)
- கட்டாயத்திருமண நோக்கத்திற்காக வெளி நாட்டிற்குக் எடுத்துச் செல்லப்படுவதற்கான ஆபத்து அல்லது எதிர்பார்ப்பு, அல்லது

- திருமணம் ஒன்றிற்குக் கட்டாயப்படுத்துவதற்கு வற்புறுத்தும் நடத்தையை பிரதிவாதி மேற்கொள்வது.

வன்முறை குறித்த இருப்பு, அல்லது எதிர்பார்ப்பு உட்பட தொடர்ந்தும் தொடர்புடையதாக இருக்கும் மாநிலம் மற்றும் பிரதேச கட்டமைப்புகளில் ஏற்கனவே இருக்கும் அடிப்படைக்காரணிகள்.

**கலந்தாலோசனைக் கேள்விகள்**

11. கட்டாயத் திருமணத்திற்கான சிவில் பாதுகாப்பு கட்டளை ஒன்றினை நாடுவதற்கான காரணிகளாக, கட்டாயத்திருமணத்துடன் இணைக்கப்பட்டுள்ள **எவ்வித சான்றுகள்**, **அல்லது** வேறுவகையான செயல்கள், ஆபத்துகள் அல்லது தீங்குகள் கட்டாயமாகக் கருதப்படவேண்டும்?

*கட்டளைகளுக்கான வாய்ப்பு*

ஒருவர் கட்டாயத்திருமணதிலிருந்து வெளியேற உதவுதல், அல்லது கட்டாயத்திருமணத்தின் தொடர்பில் ஒருவர் அனுபவிக்கும் ஏதேனும் தீங்கிலிருந்து அவரைப் பாதுகாக்க உதவுதல் போன்ற கட்டாயத்திருமணம் ஒன்று இடம்பெறுவதை தடுப்பதற்கு நாடக்கூடிய பல்வேறு கட்டளைகள் அல்லது நடவடிக்கைகள் போன்ற கட்டளையின் நோக்கத்தை கோடிட்டுக்காட்டுகிறது ( கட்டாயத்திருமணம் ஒன்று இடம்பெறுவதற்கு முன்னர் நிகழ்ந்தவையும் இதிலடங்கும்).

கட்டளைகளின் நோக்கம் பற்றி ,ஆஸ்திரேலிய அரசாங்கங்கள் கலந்துரையாடிக்கொண்டும், ஆலோசனைசெய்துகொண்டும் இருக்கின்றன. மேலும், இது விரும்பத்தக்க நிறைவேற்று பொறிமுறையிலும் தங்கியிருக்கும் (தெரிவுகள் மேலே A , B என்பவற்றில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன) கட்டாயத்திருமணத்தில் அல்லது அதன் ஆபத்தில் இருக்கும் ஆட்கள் எதிர்நோக்கும் மிகவும் பொதுவான மற்றும் குறிப்பான ஆபத்துகள் அத்துடன் தீங்குகளை நிவர்த்திசெய்யக்கூடிய சிவில் பாதுகாப்புக்கு ஆஸ்திரேலிய அரசாங்கங்கள் முன்னுரிமை வழங்கும். பின்வரும் கட்டளைகளை உள்ளடங்கும்:

- பாதுகாக்கப்பட்ட நபரை உள்ளடக்கிய கட்டாயத்திருமணம் ஒன்றிற்கு வற்புறுத்தல், கட்டாயப்படுத்த முயற்சித்தல், உதவுதல் அல்லது தூண்டுதல் போன்றவற்றிலிருந்து பிரதிவாதியைத் தடுக்கும்
- பாதுகாக்கப்பட்ட நபருக்காக கடவுச்சீட்டிற்கு விண்ணப்பித்தல், விமானப் பயணங்களுக்குப் பதிவுசெய்தல், விவாகப்பதிவாளரை ஈடுபடுத்துதல், அல்லது திருமணம் செய்யும் நோக்கங்கொண்ட அறிவித்தல் ஒன்றினைப் பூர்த்திசெய்தல் போன்ற பாதுகாக்கபட்ட

நபருக்கான திருமணம் ஒன்றினை ஒழுங்குபடுத்துவதற்கு நடவடிக்களை எடுப்பதிலிருந்து பிரதிவாதியைத் தடுக்கும்.

- வற்புறுத்துதல், கட்டாயப்படுத்த முயற்சித்தல் அல்லது கட்டாயத்திருமணத்தில் தங்கியிருக்குமாறு நபர் ஒருவரை வற்புறுத்துதல் போன்றவற்றிலிருந்து பிரதிவாதியைத் தடுக்கும்
- ஆஸ்திரேலியாவிலிருந்து பாதுகாக்கப்பட்ட நபரின் அப்புறப்படுத்தலைத் தடுக்கும்
- விதிவிலக்கான சூழ்நிலைகள், மற்றும் மனித உரிமைகளைப் பொறுத்தளவில் சமநிலைப்படுத்தல் போன்றவற்றில் அந்த பாதுகாக்கப்பட்ட நபர் சர்வதேச ரீதியாகப் பயணம் செய்வதைத் தடுக்கும்
- விதிவிலக்கான சூழ்நிலைகள், மற்றும் மனித உரிமைகளைப் பொறுத்தளவில் சமநிலைப்படுத்தல் போன்றவற்றில் பாதுகாக்கப்பட்ட நபரின் கடவுச்சீட்டை நீதிமன்றில் கையளிக்குமாறு கேட்கும்
- குறிப்பிட்ட ஒரு முறையில் பாதுகாக்கப்பட்ட ஒரு நபரைத் திருப்பி அனுப்புவதற்கு உதவுமாறு பிரதிவாதி ஒருவரை கேப்பதற்கானவை அடங்கலாக,( பாதுகாக்கப்பட்ட நபர் ஆஸ்திரேலியாவுக்குத் திரும்பிவருவதற்கு விமானபயணம் பதிவுசெய்தல் போன்ற) கட்டாயத்திருமண நோக்கமாக வெளி நாட்டுக்குக் கூட்டிச்செல்லப்பட்ட நபரைத் திருப்பி அனுப்புவதற்கு ஆதரவளிக்கும்
- பாதுகாக்கப்பட்ட நபரின் வசிப்பிடத்தை வெளிப்படுத்துமாறு பிரதிவாதியைக் கேட்டல்
- கட்டளையினால் விலக்கப்பட்ட நடத்தையை மேற்கொள்ளுமாறு வேறு ஒரு நபரை பிரதிவாதி வற்புறுத்துதல், உதவுதல் அல்லது தூண்டுதல் போன்றவற்றிலிருந்து தடுத்தல்
- குறித்த செயல்கள் அல்லது அதை ஒத்த தீங்கினைச் செய்வதிலிருந்து பிரதிவாதியைத் தடுத்தல்

மேலே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள முன்மொழியப்பட்ட இலக்கானது மக்கள் வாழ்வின் பிற அம்சங்களைப் பாதிக்கக்கூடும் அத்துடன் ஏதேனும் கவனக்குறைவான விளைவுகளைத் தவிர்ப்பதற்காக ஆஸ்திரேலிய அரசாங்கங்கள் இந்தப் பிரச்சினைகளை ஆலோசிக்கின்றன. உதாரணமாக:

- தனி நபர் ஒருவருடைய விசா ஏற்பாடுகள் அவருடைய துணைவர் அல்லது குடும்பத்தின் விசா நிலைவரத்துடன் பிணைக்கப்பட்டிருக்கலாம். மேலும், பாதிக்கப்பட்ட-உயிர்பிழைத்தவரின் வீசாவுக்கான ஆதரவை விலக்குமாறு பாதுகாப்புக் கட்டளை உத்தரவாதமளித்தவரைக் (sponsor) கோரலாம்.

- சகோதரர்கள் போன்ற ஏனய குடும்ப அந்கத்தவர்களூடாக திருமணதிற்கு பாதிக்கப்பட்ட-உயிர்பிழைத்தவருக்கு மேலும் அழுத்தம் கொடுப்பதற்காகத் துன்புறுத்துபவர் முயற்சிப்பது போல, பாதிக்கப்பட்ட-உயிர் பிழைத்தவரின் ஏனைய குடும்ப அங்கத்தவர்களுக்கு ஆபத்து அல்லது தீங்கினை, வழங்கப்படும் பாதுகாப்பு கட்டளை அதிகரிக்கக்கூடும்.

**ஆலோசனை கேள்விகள்**

12. சிறுவர்கள் உட்பட, கட்டாயத்திருமணத்தில் அல்லது அதன் அபாயத்தில் இருக்கும் ஆட்கள் முகம்கொடுக்கும் மிகவும் பொதுவான மற்றும் குறிப்பிட்ட ஆபத்துகள் மற்றும் தீங்குகளை மேலே அட்டவணைப்படுத்தப்பட்ட முன்மொழியப்பட்ட பாதுகாப்புகள் நிவர்த்திசெய்கின்றனவா? இல்லை எனில், வேறு எதனை கருத்தில்கொள்ளவேண்டும்?
13. ஆலோசிக்கப்படவேண்டிய பிரேரிக்கப்பட்ட பாதுகாப்புகள் குறித்து வேறு ஏதேனும் ஆபத்துகள் அல்லது எண்ணப்படாத பின்விளைவுகள் இருக்கின்றனவா?

### *விண்ணப்பதாரர்கள்*

வயது, மற்றும் கலாசார, மொழித்தடைகள் போன்ற வேறு தடைகள் அடங்கலாக, பல்வேறு காரணங்களால் சிவில் பாதுகாப்பு கட்டளை ஒன்றுக்காக விண்ணப்பம் செய்வதற்கு பாதிக்கப்பட்ட-உயிர்பிழைத்தோர்- விரும்பாமல் அல்லது முடியாமல் இருக்கலாம். இதை நிவர்த்திசெய்வதற்கு, பாதிக்கப்பட்ட-உயிர் பிழைத்தவருக்காக சிவில் பாதுகாப்பு கட்டளை ஒன்றிற்கு விண்ணப்பம் செய்வதற்கு பல்வேறு மக்கள் அனுமதிக்கப்படுவதை இது முன்மொழிகிறது. சாத்தியமான விண்ணப்பதாரிகளினுள் பின்வருவோர் அடங்குவர்:

- கட்டாயத்திருமணத்தில் அல்லது அதன் ஆபத்தில் இருக்கும் அந்த நபர்
- குழந்தை ஒன்றின் சார்பாக பெற்றோர் அல்லது பாதுகாவலர்
- முடிவு-எடுக்கும் திறமைகளைக் கொண்டிராரத 18 வயதிற்கும் மேலான ஒருவரின் சார்பாக ஒரு பாதுகாவலர்
- காவல் உத்தியோகத்தர்கள்
- குழந்தை பாதுகாப்பு முகவர்கள், மற்றும்
- குறிப்பிட்ட சமூக அமைப்புகள், சேவை வழங்குபவர்கள் அத்துடன்/அல்லது பிற அரசு-சார்பற்ற நிறுவனங்கள்

நீதிமன்றின் அனுமதியுடன் விண்ணப்பம் ஒன்றினை மூன்றாம் தரப்பினர் மேற்கொள்வதை அனுமதிக்கும் சட்ட ஏற்பாடுகளைக் கருத்தில்கொள்ள தகைமைகள் இருக்கக்கூடும. விசாலமான பல்வேறு விண்ணப்பதாரிகள்

சிவில் பாதுகாப்பை நாடுவதற்கு அணுகக்கூடிய வழிகளை வழங்கும்வேளை, பாதிக்கப்பட்ட-உயிர்பிழைத்தவரின் சிறந்த நலன்களுக்காக விண்ணப்பதாரி செயல்படுகிறாரா என்பதை நீதிமன்றம் தீர்மானிப்பதைக் கடினமாக்குவது போன்ற ஆபத்துகளும் அங்கே இருக்கலாம்.

வேறு வழக்கு நடவக்கைகளின்போது, பொருத்தமானதென நீதிமன்றம் கருதினால், ஒரு விண்ணப்பம் இல்லாமலேயே, தனது சொந்த விண்ணப்பத்தின்(own motion) பேரில் கட்டளை ஒன்றினைப் பிறப்பிப்பதற்கு நீதிமன்றங்களால் இயலக்கூடும்.

**ஆலோசனை கேள்விகள்**

14. கட்டாயத்திருமணத்திற்கான குடிமக்கள் பாதுகாப்பு கட்டளை ஒன்றிற்கு விண்ணப்பிக்கக்கூடிய கூடுதலான மக்கள் அல்லது நிறுவனங்கள் ஏதேனும் இருக்கின்றனவா? ஆம் எனில், யார், ஏன்?
15. பாதுகாப்பு கட்டளை ஒன்றிற்கு விண்ணப்பிப்பதற்கான திறனைக் குறிப்பிட்ட தனிப்பட்டோர் அல்லது நிறுவனங்களுக்குக் வழங்குவதில் ஆபத்துகள் இணைந்து உள்ளதா? அவ்வாறானால், இத்தகைய ஆபத்துக்கள் யாவை; எவ்வாறு அவற்றைக் குறைக்கலாம்?

### *பிரதிவாதிகள்*

சிவில் பாதுகாப்பு கட்டளை யாருக்கு எதிராகப் பிறப்பிக்கப்படுகிறதோ அந்த நபர் பிரதிவாதியாவார். வேறு வார்த்தையில் கூறுவதானால், கட்டளையின் பிரகாரம் செயற்படுவதற்கு, தனது நடத்தையை மாற்றிக்கொள்ளவேண்டியவர் எவரோ, அவர்தான். சிவில் பாதுகாப்பு கட்டளைகளுக்கான விண்ணப்பங்களில், யார் பிரதிவாதியாவார் என்பது பற்றி, பல்வேறு விதிகளை அதிகாரஎல்லைகள் கொண்டுள்ளன. உதாரணமாக, உடனடி குடும்ப உறுப்பினர்கள், அல்லது நெருங்கிய பங்காளிகள் ஆகியோருக்கு எதிராகக் கட்டளைகளைப் பிறப்பிக்க மாத்திரம் சில அதிகார எல்லைகள் குடும்பம் மற்றும் வீட்டு வன்முறை கட்டமைப்புகள் அனுமதியளிக்கின்றன. குழந்தையின் நல்வாழ்வை உறுதிசெய்யப் பொருத்தமானதென நீதிமன்றம் கருதினால், எந்தவொரு நபருக்கு எதிராகவும் தடையாணையை வழங்க *Family Law Act 1975* (Cth) (குடும்ப சட்டம்)-இன் கீழ் ‘பெற்றோருக்கான கட்டளைகளை’ (Parenting orders) அனுமதியளிக்கிறது.

கட்டாயத் திருமண சிவில் பாதுகாப்புகளை மேம்படுத்துவதற்கு, பிரதிவாதிகளை வரையறுக்க அல்லது நீதிமன்றம் பொருத்தமானதெனக் கருதும் எந்தவொரு நபருக்கும் பொருந்தக்கூடிய கட்டளையைப் பிறப்பிக்க நீதிமன்றுக்கு தற்துணிபை(discretion) வழங்குவது பொருத்தமாக இருக்குமாவென ஆஸ்திரேலிய நீதிமன்றங்கள் ஆலோசிக்கின்றன. கட்டாயத்திருமணத்தைப் பொறுத்தவரை, ஆபத்தை வெளிகாட்டும் நபர், ஒரு

குடும்ப அங்கத்தவராகமாட்டார். உதாரணமாக, கட்டாயத்திருமணத்திற்கு விரும்பும் துணைவர் அல்லது சமூக அங்கத்தவர் ஒருவர், திருமணத்திற்கு நபர் ஒருவரை வற்புறுத்தக்கூடும்.

சாத்தியப்படக்கூடிய பிரதிவாதிகள் பின்வருபவர்களை உள்ளடக்கக்கூடும்:

- பெற்றோர் மற்றும் தூரத்து குடும்ப உறுப்பினர்கள் அடங்கலாக, குடும்ப உறுப்பினர்கள்
- கட்டாயத்திருமண ஆபத்தில் இருக்கும் ஒருவர் தான் மணமுடிக்க நோக்கியுள்ள துணைவர்
- மத, கலாசார அல்லது சட்டம்சார்ந்த வைபவங்கள் உட்பட விவாகப்பதிவாளர்கள்,
- வற்புறுத்துதல், வற்புறுத்த முயற்சித்தல், உதவியளித்தல், அல்லது கட்டாயத்திருமணம் ஒன்றிற்குத் துணைபோதல் உட்பட ஒருவரை மணமுடிக்குமாறு வற்புறுத்துவதில் ஈடுபாடுகொண்ட பிற நபர்/நபர்கள்

**ஆலோசனை கேள்விகள்**

16. கட்டாய திருமண சிவில் பாதுகாப்புகளுக்கு யார் பிரதிவாதியாகலாமென்பதில் ஏதேனும் மட்டுப்பாடுகள் இருக்கவேண்டுமா? அவ்வாறானால், எவ்வாறு அவை வரையறைசெய்யப்படவேண்டும் (உதாரணம்: குடும்ப அங்கத்தவர்கள் மாத்திரம்)?

### *பாதிக்கப்பட்ட- உயிர்பிழைத்தவர் முகவர்*

சிவில் பாதுகாப்புகள் மற்றும் பரிகாரங்களுக்காக விண்ணப்பிப்பதற்காக இணைக்கப்பட்டிருக்கும் நடைமுறையூடாக தமது நிறுவனத்தைச் செயற்படுத்த அவர்களால் இயலும் என்பதை உறுதிசெய்வதற்கு பாதிக்கப்பட்ட--உயிர்பிழைத்தோரின் விருப்பங்களைக் கருத்தில் கொள்வது முக்கியமானதாகும். மனித உரிமைகள் மற்றும் பாதிக்கப்பட்ட-- உயிர்பிழைத்தோரின் சுதந்திரத்தைப் பாதிக்கும் எந்தவொரு கட்டளைகளுடனும் இது குறிப்பாகப் பொருத்தமானதாக இருக்கும் - உதாரணமாக, கட்டாயத்திருமணத்திற்காகக் கடல்கடந்து ஒருவர் கூட்டிச்செல்லப்படுவதை நிறுத்துதல்

கட்டாயத்திருமணத்தில் அல்லது அதன் ஆபத்தில் இருக்கும் ஆட்களுக்கு குடும்ப உறுப்பினர் அல்லது சமூக அங்கத்தவர்களால் அழுத்தம் கொடுக்கப்படும் நிகழ்வுகளும் இருக்கலாம் அதாவது சிவில் பாதுகாப்பு கட்டளைகளை ஏற்று நடக்க இணங்கவில்லை அல்லது விரும்பவில்லையெனச்சொல்வது அத்துடன் இப்படியான விடயங்களில் பாதிக்கப்பட்ட- உயிர்பிழைத்தோர் ஆதரவளிக்கப்படுவது மற்றும் பாதுகாக்கப்படுவது முக்கியமாகும்.

இந்தக் கவலைகளை நிவர்த்திசெய்வதற்கு, கட்டளை ஒன்றினைப் பிறப்பிக்கும்போது பாதுகாக்கப்படுபவரின் விருப்பங்கள், உணர்வுகள் போன்றவற்றை நீதிமன்றங்கள் கவனத்தில் எடுபதற்கு அனுமதிக்கும் சட்ட ஏற்பாடுகள் முன்மொழியப்படுகின்றன. கட்டாயத்திருமணத்தை எதிர்கொள்ளும் ஒருவர் அனுபவிக்கக்கூடிய சாத்தியப்படக்கூடிய மோசமான உளவியல் அழுத்தம் மற்றும் பலவந்தம் போன்றவற்றை அடையாளம்காணும் அதேவேளை இது பாதுகாக்கப்பட்ட ஆளின் நிறுவனத்திற்கு முன்னுரிமை அளிக்கிறது.

**ஆலோசனை கேள்விகள்**

17. கட்டளைகளைக் கைவிடுமாறு பாதிக்கப்பட்ட-உயிர்பிழைத்தோர் வற்புறுத்தப்படும் ஆபத்தினை எவ்வாறு நிவர்த்திசெய்வது?
18. கட்டாயத் திருமணத்திற்காக, விசாரணை மேற்கொள்ளவும் சிவில் பாதுகாப்புகளை வழங்கவும் மற்றும் செயல்முறைக்குள் ஒன்றிணைக்கவும், குழந்தைகள் உட்பட பாதிக்கப்பட்ட-உயிர்பிழைத்தோரின் கருத்துகளை சிறந்தமுறையில் எவ்வாறு நாடலாம்?

*சட்ட நடவடிக்கைகள் ஊடாக நீதிமன்ற பாதுகாப்புகளும், உதவியும்.*

தற்போது, சிவில் பாதுகாப்புக் கட்டளைகளுக்காக பாதிக்கப்படக்கூடிய அல்லது விசேட சாட்சிக்காரர்கள்களுக்காக விண்ணப்பித்தல் அடங்கலாக, குடும்பம் மற்றும் வீட்டு வன்முறை அமைப்புகளூடாக, பெற்றுக்கொள்ளக்கூடிய பாதுகாப்புகளை அதிகார எல்லைகள் கொண்டுள்ளன. ஏனைய பாதிக்கப்படக்கூடிய சாட்சிக்காரர்களைப்போல, அதற்குச் சமமான நீதிமன்ற பாதுகாப்புகள் கட்டாயத்திருமணத்தில் அல்லது அதன் ஆபத்தில் இருக்கும் மக்களுக்கு வழங்கப்பட வேண்டுமென முன்மொழியப்படுகிறது.

சாட்சிக்காரர்கள் மிரட்டப்படுதலைத் நீதிமன்றப் பாதுகாப்பு தடுக்கலாம் அத்துடன் அவர்களின் பாதுகாப்பு, நல்வாழ்வுக்கு ஆதரவளிக்கலாம். சூழ்நிலைகளைப் பொறுத்து, பாதுகாப்புகள் பின்வருவனவற்றை உள்ளடக்கும்:

- உதாரணமாக ஒரு திரையை உபயோகித்து, அல்லது ஒலி-ஒளி இணைப்பு ஒன்றின் ஊடாக சாட்சிகள் சான்றுகளைக் கொடுத்து, பாதிக்கப்பட்ட-உயிர்பிழைத்தோர் பிரதிவாதியைப் பார்க்கவேண்டியதில்லை என்பதை உறுதிப்படுத்துவதற்கான ஏற்பாடுகள்
- நீதிமன்றில் உதவியாளரை வைத்திருத்தல்
- மூடப்பட்ட நீதிமன்றினுள் சாட்சியம் வழங்குதல்
- தாமாகவே முன்னிலையாகும் (சுய-பிரதி நிதித்துவம்) பிரதிவாதிகள் குறுக்கு விசாரணை செய்யப்படாமை.

மேலதிகமாக, குழந்தைகள் ஈடுபட்டிருக்கும் வழக்குகளில், சுயாதீன குழந்தைகளுக்குரிய சட்டவாளர்களுக்கு (Independent Children's Lawyers ) வழக்கை ஒப்படைக்கும் ஆற்றல் குடும்ப சட்ட அதிகாரத்தைக் (நியாயாதிக்கம்)(அதிகார எல்லைகள்) கொண்டுள்ள நீதிமன்றங்களுக்கு உண்டு.

சிவில் பாதுகாப்புகளுக்கு விண்ணப்பிக்கும் கட்டாயத்திருமணத்தில் அல்லது அதன் ஆபத்தில் இருக்கும் மக்களுக்காக ஆதரவை நெறிப்படுத்தவும் பிற சேவைகள் மற்றும் நடவடிக்கைகள் பொருத்தமானதாக இருக்கலாம்.

- முன்னணி பதிலளிப்போர்,- சட்ட அலுவலர்கள், நீதிமன்றங்கள் மற்றும் நீதித்துறை (பகுதி 2 ஐப் பார்க்கவும்
- கலாசார மற்றும் மொழிரீதியாக வேறுபட்ட சமூகங்களில் இருக்கும் பாதிக்கப்பட்ட-உயிர்பிழைத்தோர் உட்பட, அவர்களின் விண்ணப்பங்களுக்கு உதவுவதற்கான பாதிக்கப்பட்ட-உயிர்பிழைத்தோர் ஆதரவு சேவைகள்.
- FMSSP போன்ற அரச நிதியுதவியுடனான ஆதரவு சேவைகளுக்கு, ஆபத்தில் இருப்பவர்கள்களைச் சிபாரிசு செய்யும் வழிகள்

மேலும் பரிசீலனை, கலந்துரையாடல் போன்றவற்றிற்காக சட்ட அமைப்புடன் கட்டாயத்திருமணத்தால் பாதிக்கப்பட்ட-உயிர்பிழைத்தோர் ஈடுபட்டிருக்கும்போது அவர்களின் ஆதரவுகளை வலுவூட்டும் வாய்ப்புகள் பற்றிய கருத்துகளை ஆஸ்திரேலிய அரசாங்கம் வரவேற்கிறது.

**ஆலோசனை கேள்விகள்**

19. சிறுவர்கள் உட்பட, குடிமக்கள் பாதுகாப்பு கட்டளை விண்ணப்ப செயல்முறை ஊடாக உதவுவதற்கு, கட்டாயத்திருமணத்தில் அல்லது அதன் ஆபத்தில் இருக்கும் மக்களுக்கு, வேறு எவ்வித ஆதரவுகள் கட்டாயமாகக் கிடைக்கவேண்டும்? உதாரணமாக, விண்ணப்ப நடைமுறை அல்லது மேலதிக நீதிமன்ற பாதுகாப்ு ஊடாக மேலதிக ஆதரவுகள்

### *இடைக்கால கட்டளைகள் மற்றும் ஒருதரப்பு விசாரணைகள்*

அடுத்த தரப்பினருக்கு -அறிவித்தல் தராமல், அவசரமாக சிவில் பாதுகாப்பு கட்டளைகளுக்காக வழக்கு விசாரணை செய்வதற்கு விண்ணப்பங்களை இடைக்கால மற்றும் ஒருதரப்பினர் கட்டளைகள் அனுமதிக்கின்றன. அவை பொதுவாக கால வரையறைகொண்டவையாகும். வழக்கமான நீதிமன்ற நடைமுறையினூடாக விண்ணப்பங்கள் விசாரிக்கப்படும்வரை பாதுகாப்பைக் கொண்டிருப்பதை அனுமதிக்கின்றன.

இடைக்கால அல்லது ஒருதரப்பினர் கட்டளைகளுக்கு (ex-parte orders) நீதிமன்றங்கள் பொதுவாகப் பொறுப்பானவையாகும். ஆயினும், குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில், அனைத்து அதிகார எல்லைகளுக்குள்ளும், இடைக்காலக் கட்டளைகளை காவல் அதிகாரிகள் மேற்கொள்ளலாம். உதாரணமாக,

பாதுகாக்கப்பட்ட நபர் ஒருவரின் உடனடி பாதுகாப்பை உறுதிசெய்ய, இடைக்காலக் கட்டளைகளை காவல் அதிகாரிகள் வழங்கலாம் அல்லது தொலைபேசியூடாக இடைக்கால கட்டளைகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

கட்டாயத் திருமணத்தினால் பாதிக்கப்பட்டு-உயிர்பிழைத்தோர் - ஆஸ்திரேலியாவுக்கு வெளியே கடத்தப்படும் அபாயம் உட்பட, அவர்களின் பாதுகாப்பிற்கு உடனடி ஆபத்துகள் பலவற்றை எதிர் நோக்குவார்கள்., சிவில் பாதுகாப்பு கட்டளைக்கான விண்ணப்பம் பற்றி நீதிமன்ற -இறுதி முடிவை எதிர்பார்த்து, பாதிக்கப்பட்ட-உயிர்பிழைதோரின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு தேவை ஏற்படின், நீதிமன்றத்தினால் மேற்கொள்ளப்படும் இடைக்கால மற்றும்/அல்லது ஒரு தரப்பினர் கட்டளைகள் சாத்தியப்படும்.

**ஆலோசனை கேள்விகள்**

20. கட்டாயத்திருமணத்தில் அல்லது அதன் ஆபத்தில் ஒருவர் இருக்கும்போது, இடைக்கால கட்டளையைப் பிறப்பிப்பதற்கு எவ்வித காரணங்கள் பொருத்தமாகும்?
21. முன்மொழியப்பட்ட கட்டளைகளின் நோக்கம் சிலவற்றை, ஆனால் முழுவதுமல்ல, உள்ளடக்குவதற்கு இடைக்கால கட்டளைகள் மட்டுப்படுத்தப்பட வேண்டுமா (கட்டளைகளின் நோக்கத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது)? அவ்வாறானால், எத்தகைய பாதுகாப்புகள் சேர்க்கப்படவேண்டும் அல்லது விலக்கப்படவேண்டும் அத்துடன் ஏன்?
22. கட்டாயத்திருமணத்தில் அல்லது அதன் அபாயத்தில் ஒருவர் இருக்கும் வேளையில், இடைக்கால கட்டளை ஒன்றிற்காக காரணங்களைக் கவனித்தில் கொள்ளும்போது கட்டாயத்திருமணதின் ஆபத்தை என்னவகையான சான்றுகள் சுட்டிக்காட்டலாம் அத்துடன் காவல்துறையால் கருதப்படலாம்?

### *சேவை, வலியுறுத்தல் மற்றும் மீறல்கள்*

ஆஸ்திரேலியாவில், சிவில் பாதுகாப்பு கட்டளைகளைக் கொண்டுசென்று கையளிப்பதற்கு பொதுவாக காவல் அதிகாரிகள் பொறுப்புடையவர்களாவர். கட்டளைக்குப் பணிந்து நடப்பது, பொறுப்புக்கூறல் மற்றும் பாதுகாக்கப்பட்ட நபரின் பாதூகாப்பை உறுதிசெய்யவும், பிரதிவாதிக்குத் தெரியப்படுத்த காவல் அதிகாரி மூலம் கட்டளையைக் கையளிப்பது உயர்மட்ட உறுதியை அளிக்கும்.

சில குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில், கட்டளைகள் இலத்திரனியல் வழியாகக் கையளிப்பது பொருத்தமானதாகும். நியாயமான நடைமுறையை நிச்சயப்படுத்துவதற்கு கவனமான பரிசீலனை இந்த விருப்பத்தேர்வுக்குத் தேவையாகும். உதாரணமாக, இலத்திரனியல் ஊடாக கையளிக்கப்படும் கட்டளை 'spam,' க்குள் தொலைந்துபோகலாம், 'ஸ்காம்' என கவனிக்காமல் விடலாம், அல்லது இணையத்தளம் இல்லாமல் பிரதிவாதிகளால்

அணுகமுடியாமல் போகலாம். அவர்கள் கலாசாரரீதியாகவும், மொழிரீதியாகவும் வேறுபட்ட பின்னணியைக் கொண்டவர்கள் அல்லது அவர்களின் அணுகலுக்குப் வேறு தேவைகள் இருக்கின்றன.

தொடர்புபட்ட காவல்துறை முகவரால் கட்டாயத்திருமண கட்டளைகள் நிறைவேற்றப்படும். ஆயினும், மாநில, பிரதேச, உள்ளூர் மற்றும் குடும்ப வன்முறை கட்டமைப்புடன், மேம்படுத்தப்பட்ட பாதுகாப்புகள் ஒன்றிணைக்கப்பட்டால், ஆஸ்திரேலியாவுக்கு வெளியே ஆஸ்திரேலிய அரசாங்கங்கள் இன்னமும் இந்த முக்கியமான சிக்கலை ஆலோசித்துக்கொண்டிருக்கின்றன.

அனைத்து ஆஸ்திரேலிய அதிகார எல்லைகளுள்ளும், சிவில் பாதுகாப்பு கட்டளைகளை ஏற்க மறுத்தல் தண்டனைக்குரிய குற்றமாகும். அதேபோல், கட்டாயத்திருமணத்தில் அல்லது அதன் ஆபத்தில் இருக்கும் ஆட்களுக்கான சிவில் பாதுகாப்புகளை மறுத்தல் தணடனைக்குரிய குற்றமாகும்

**ஆலோசனை கேள்விகள்**

23. கட்டளைகள் தனிப்பட்ட முறையில் கையளிக்கப்படத்தேவைப்படாத ஏதேனும் சந்தர்பங்கள் இருக்கின்றனவா (உதாரணமாக இலத்திரனியல் சேவையூடாக)? அவ்வாறானால், அத்தகைய சந்தர்ப்பங்கள் யாவை?

### *பிற பரிகாரங்கள்*

மேம்படுத்தப்பட்ட கட்டாயத்திருமண சிவில் பாதுகாப்புகளையும், பரிகாரங்களையும் வழங்குவதற்கு மாதிரி அமைப்பில் கவனிக்கப்படக்கூடிய பிற பரிகாரங்களும் இருக்கலாம். எடுத்துக்காட்டாக, செல்லுபடியற்றதாக்குவதை நாடுவதற்கு, கட்டாயத்திருமணத்தில் இருபவர்களுக்காக, செயல்முறை ஒழுங்குபடுத்தலுக்கு ஆலோசனை வழங்கப்படலாம்.

**ஆலோசனை கேள்விகள்**

24. குடிமக்கள் (சிவில்) பாதுகாப்புகளுக்கு மேலாக, கட்டாயத்திருமணத்தில் அல்லது அதன் ஆபத்தில் இருக்கும் மக்களுக்கு கவனிக்கப்படவேண்டிய பரிகாரம் இருக்கிறதா?
25. தற்போது, பாதிக்கப்பட்ட- உயிர்பிழைத்தோரின் கட்டாயத்திருமணம் தொடர்பாக, செல்லுபடியற்றதாக்கும் பிரகடனம் ஒன்றினைக் கேட்கும்போது, அவர்கள் தடைகள் அல்லது சிரமங்களை எதிர்நோக்குகிறார்களா? ஆம் எனில், இத்தகைய தடைகள் அல்லது சிரமங்கள் எவ்வாறு நிவர்த்திசெய்யப்படலாம்?

## ஆதரவு தேடுவதில் இருக்கும் அபாயக் காரணிகளும், தடைகளும்

கலாசார குழு, மதம் அல்லது இனம் எதற்கும் கட்டாயத்திருமணம் விதிவிலக்கானதல்ல. ஆயினும், கட்டாயத்திருமணத்துடன் இணைக்கப்படக்கூடிய ஆபத்துக் காரணிகளுக்கு ஆஸ்திரேலியாவில் இருக்கும் சில சமூகங்கள் அதிகளவான வெளிப்பாட்டைக் கொண்டிருக்கலாம். அண்மைக்கால இடப்பெயர்ச்சி, தற்காலிக அல்லது தங்கிவாழும் விசா நிலைவரம், மொழித் தடைகள் அல்லது சமூக ஆதரவு மற்றும் வலையமைப்பு இல்லாமை போன்றவற்றை இது உள்ளடக்கலாம்.

கட்டாயத்திருமணத்தில் அல்லது அதன் ஆபத்தில் இருக்கும் ஆட்கள், ஆதரவை அணுகுவதில் தடைகளை அனுபவிகலாம். இனத்துவேஷம்ம், பாகுபாடு, கலாசார ரீதியாக பாதுகாப்பான சேவைகளை அணுக முடியாமை மற்றும்/அல்லது அணுகக்கூடிய புகார் அளிக்கும் பாதைகள் இல்லாமை. பொருத்தமான மற்றும் பாதுகாப்பான ஆதரவு சேவைகள் மற்றும் வலையமைப்புகளுக்கான மட்டுப்படுத்தப்பட்ட அணுகல் உட்பட, கூடுதலான ஆபத்துக் காரணிகளையும் இயலாமையுடனான மக்கள் அனுபவிக்கக்கூடும்.

சிக்கலான குடும்பம், கட்டாயத்திருமணத்தின் கலாசார மற்றும் சமூகப் பரிமாணங்களும் ஆதரவு தேடுவதற்கு ஒரு தடையாகச் செயற்படலாம். எடுத்துக்காட்டாக, ஒரு குடும்பம் அல்லது சமூக உறுப்பினர் ஒருவரைப்பற்றி இளைஞர் ஒருவர் வெளியில் பேசுவதை வசதியாக உணரமாட்டார்.

வழக்கு நடவடிக்கைகளில் ஈடுபடுவது, குடும்பங்கள் மற்றும் சமூகக்களுக்கு வெட்க உணர்வைக் கொண்டுவரலாம் அத்துடன் ஆதரவைத்தேடும் நபர் ஒருவருக்கு அதிகரிக்கப்பட ஆபத்துகள் வரலாம். கட்டாயத்திருமணத்திற்கு சட்டப்பாதுகாப்புகளை ஒருவர் அணுகுவது, அதனுடன் இணைந்த ஆபத்துகள் கவனமாக கவனிக்கப்பட்டுக் குறைக்கப்படுவது முக்கியமானதாகும். அத்துடன் பாதுகாப்பு தேடும அந்த நபர் பொருத்தமான உதவிகளைக் கொண்டுள்ளார்.

**ஆலோசனை கேள்விகள்**

26. கட்டாயத்திருமணத்தில் அல்லது அதன் ஆபத்தில் இருக்கும் மக்கள் ஆதரவு தேடுவதில் இருக்கும் ஆபத்துகள் மற்றும் தடைகள் என்ன? இவற்றை நிவர்த்திசெய்ய எவ்வித உபாயங்களைக் கருத்தில்கொள்ளலாம்?
27. ஒருவர் சட்ட அமைப்பினூடாகப் பாதுகாப்பை நாடினால், அவர் எவ்வித ஆபத்துகள் மற்றும் தடைகளைச் சந்திக்க நேரிடலாம்? எவ்வாறு இதற்கான தண்டனையைக் குறைக்கலாம்?
28. ஆதரவு அமைப்புகள் மற்றும் சட்ட அமைப்புடன் ஈடுபடல், கட்டாயத்திருமணத்தை எதிர்நோக்கும் மக்களின் ஆபத்துகளை அதிகரிக்கலாம். ஒரு நபர் கட்டாயத்திருமணத்தின் ஆபத்தில் இருக்கும்போது, முன்னரங்க பதிலளிப்போர் அல்லது சட்ட சேவைகள் போன்றவற்றால் பொறுப்பேற்கக்கூடாத வேறு ஏதாவது செயல்கள் உள்ளனவா?

## சிறுவர்களுக்கு ஆதரவளித்தல்

1 யூலை 2017 முதல் 30 யூன் 2022 வரை, AFP-க்கான கட்டாயத்திருமண அறிவிப்புகளில், 18 வயதிற்கு உட்பட்ட ஆட்களிடமிருந்து 31%மும் 16 வயதிற்கும் உட்பட்டவர்களிடமிருந்து 31% பெற்றுக்கொண்டதாக AFP அறிக்கைகள் காண்பிக்கின்றன.

மாநில, பிரதேச குழந்தைப்பாதுகாப்பு கட்டமைப்புகள் மற்றும் *Family Law Act 1975* (Cth) போன்றவற்றினூடாக, குழந்தைகளுக்கான தற்போதய பாதுகாப்புகள் கிடைக்கும். உதாரணமாக, குழந்தைகளின் நல்வாழ்வை உறுதிப்படுத்தவும், ஆஸ்திரேலியாவுக்கு வெளியே குழந்தைகள் எடுத்துச்செல்லப்படுவதைத் தடுப்பதற்காக விமான நிலைய கண்காணிப்புப் பட்டியலில் குழந்தைகளை வைப்பதற்கும் பொருத்தமானதென நீதிமன்று கருதினால், எந்தவொரு நபருக்கு எதிராகவும் தடையாணை உட்பட குழந்தைகளைப் பாதுகாப்பதற்கு தடையாணைகளை குடும்ப சட்டம் (*Family Law Act) அனுமதிக்கிறது.*

ஆயினும், கட்டாயத்திருமணத்தைத் தவிர்க்கவும், அல்லது வெளியேறவும் விரும்பும் சிறுவர்களுக்குத் தேவைப்படும் குறிப்பிட்ட ஆதரவுக்கும், அணுகல் தேவைகளுக்கும் கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டும். உதாரணமாக, பொருத்தமான நீதிமன்ற பாதுகாப்புகள் வழங்கப்படுதல்போல, நீதிமன்ற ஆவணங்கள் மற்றும் படிவங்களை அணுகுவதற்கு கட்டாயத்திருமணத்தின் ஆபத்தில் இருக்கும் குழந்தைகளுக்குத் தேவைப்படக்கூடிய ஏதேனும் கூடுதல் ஆதரவு போன்றவற்றின் பரிசீலனையை இது உள்ளடக்கும்.

**ஆலோசனை கேள்விகள்**

29. முன்மொழியப்பட்ட சட்ட பாதுகாப்புகளை அணுகுவதற்கும் மற்றும் விண்ணப்பங்கள், , நீதிமன்று மற்றும் வேறு சட்ட நடைமுறைகளூடாக சிறுவர்களுக்கு உதவுவதற்கும் எவ்வித மேலதிக ஆதரவுகள் மற்றும் பாதுகாப்புகள் ஆலோசிக்கப்படலாம்?

# தீர்மானம்

கட்டாய திருமண பாதுகாப்புகள் மற்றும் பரிகாரங்கள் போன்றவற்றை மேம்படுத்த ஒரு மாதிரி அமைப்பை மேம்படுத்துவதற்கு இந்த ஆலோசனையூடாக வழங்கப்படும் அறிவுரை அனைத்து ஆஸ்திரேலியாவின் பணியை அறிவிக்கும். இந்த வேலை தொடர்ச்சியாக இடம்பெறும் என்பதுடன் சகல அதிகார எல்லைகளின் மேலும் பரிசீலனை மற்றும் முடிவுகளுக்கு உட்படுத்தப்படும்.

உங்களிடம் ஏதேனும் கேள்விகள் அல்லது மேலதிக கருத்துகள் இருந்தால், ForcedMarriage@ag.gov.au.-இல் சட்டமாஅதிபர் திணைகளத்துடன் தொடர்புகொள்ளுமாறு அழைக்கப்படுகிறீர்கள்.

# ஒருங்கிணைக்கப்பட்ட ஆலோசனை கேள்விகள்

*ஆலோசனைக்கான முன்மொழிவுகள்*

1. கட்டாயத்திருமணத்திற்கு தேசியஅளவில் சீரான பதில்களை மேம்படுத்த இவை பயனுள்ள விருப்பத்தேர்வுகளா? கருத்தில் கொள்ளவேண்டிய பல்வேறு விருப்பத்தேர்வுகள் உள்ளதா?

*பகுதி1: குடும்ப மற்றும் வீட்டு வன்செயல் சேவைகளை, பாதிக்கப்பட்ட-உயிர்பிழைத்தோர் அணுகுவதற்கான வழிகளை மேம்படுத்துவதற்கு,குடும்ப மற்றும் வீட்டு வன்முறையயின் ஒரு வடிவமாகக் கட்டாயத் திருமணம் குறித்த பகிரந்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வுகளைக் கட்டியெழுப்புதல்*

2. கட்டாயத்திருமணம், குடும்ப மற்றும் வீட்டுவன்முறையின் ஒரு வடிவமாக அங்கீகரிக்கப்பட வேண்டுமா? ஏன்?
3. குடும்பம் மற்றும் வீட்டு வன்முறையின் ஒரு வடிவமாகக் கட்டாயத்திருமணத்தை திறம்பட அங்கீகரிப்பதற்கு எவ்வித சட்ட, கொள்கை மாற்றங்கள் அல்லது கூடுதல் வழிகாட்டல் தேவை?
4. குடும்ப மற்றும் வீட்டு வன்செயலின் ஒரு வடிவமாக கட்டாயத்திருமணத்தை மிகவும் சீராக அங்கீகரிக்க குடும்ப மற்றும் வீட்டு வன்முறை சேவைகளுக்கு உதவ என்ன மேம்பாடுகள் அல்லது மேலதிக வழிகாட்டல் தேவைபடலாம்.

*பகுதி 2: கல்வி மற்றும் விழிப்புணர்வு-தூண்டுதலை மேம்படுத்துதல்*

5. கல்வி அல்லது விழிப்புணர்வு-தூண்டும் நடவடிக்கைகள் என்ன தலைப்புகளின் கவனம் செலுத்தலாம்
6. கட்டாயத்திருமணத்தால் பாதிக்கப்பட்ட சமூகதில் கல்வி மற்றும் விழிப்புணர்வைத் தூண்டுவதில் யார் ஈடுபடவேண்டும்?
7. சமூகத்தில் கல்வி மற்றும் அதிகரிக்கப்பட்ட கட்டாயத்திருமணம் குறித்த விழிப்புணர்வு தேவைப்படும் குழுக்கள் எவை (உதாரணமாக, காவல்துறை போன்ற முன்னணி பணியாளர்கள், சிறுவர் பாதுகாப்பு மற்றும்/அல்லது சமூகத்தில் இருக்கும் குறிப்பிட்ட கூட்டாளிகள்)

*பகுதி3: குடிமக்கள் பாதுகாப்பு மற்றும் பரிகாரங்களை வலுப்படுத்துதல்*

*பின்னூட்டத்திற்கான முன்மொழிவு*

8. ஆஸ்திரேலியாவில் கட்டாயத்திருமணத்திற்குப் பதிலளிக்கவும், தவிர்க்கவும் கிடைக்கும் தற்போதுள்ள சட்ட பாதுகாப்புகளில் இடைவெளிகள் இருப்பதாக நீங்கள் நினைக்கிறீர்களா? அப்படியானால், அத்தகைய இடைவெளிகள் என்ன, அவற்றிற்கு தேசிய பதில் தேவையா?
9. குடிமக்கள் சட்ட பாதுகாப்புகளை வலுப்படுத்துவதற்கு இரண்டு விருப்பத்தேர்வுகளை இந்தக் கட்டுரை விவாதிக்கிற்து: விருப்பத்தேர்வு A (தற்போதய சட்டத்தை மேம்படுத்தவும் ஒருவேளை பகிரப்பட்ட கொள்கைகளூடாக), விருப்பத்தேர்வு B(தனியான பொதுச்சட்டத்தை

அறிமுகப்படுத்துங்கள்). இந்த இரண்டு செயலாக்க விருப்பத்தேர்வுகளில் எது மிகவும் பயனுள்ளது, ஏன்? முக்கிய ஆபத்துகள் என்ன? கருத்தில் கொள்ள வேண்டிய வேறு விருப்பத்தேர்வுகள் உள்ளனவா?

10. விருப்பத்தேர்வு A இன் கீழ் குடும்பம் மற்றும் குடும்ப வன்முறை கட்டமைப்புகளுக்கு மாற்றாக குடிமக்கள் பாதுகாப்பு கட்டமைப்புகள் உள்ளன, அவை கட்டாய திருமண குடிமக்கள் பாதுகாப்பை வலுப்படுத்த பயன்படுத்தப்படுமா?

*கட்டளைகளுக்கான காரணங்கள்*

11. கட்டாயத்திருமணத்திற்காக குடிமக்கள் பாதுகாப்பு கட்டளையை நாடுவதற்கான காரணங்களாக கட்டாயத்திருமணத்துடன் இணைக்கப்பட்ட என்ன சான்று அல்லது வேறுவிதமான நடவடிக்கைகள், ஆபத்துகள் அல்லது தீங்குகள் கவனத்தில் கொள்ளப்படவேண்டும்?

*கட்டளைகளுக்கான வாய்ப்பு*

12. சிறுவர்கள் உட்பட, கட்டாயத்திருமணத்தில் அல்லது அதன் அபாயத்தில் இருக்கும் ஆட்கள் முகம்கொடுக்கும் மிகவும் பொதுவான மற்றும் குறிப்பிட்ட ஆபத்துகள் மற்றும் தீங்குகளை மேலே அட்டவணைப்படுத்தப்பட்ட முன்மொழியப்பட்ட பாதுகாப்புகள் நிவர்த்திசெய்கின்றனவா? இல்லை எனில், வேறு எதனை கருத்தில்கொள்ளவேண்டும்?
13. ஆலோசிக்கப்படவேண்டிய பிரேரிக்கப்பட்ட பாதுகாப்புகள் குறித்து வேறு ஏதேனும் ஆபத்துகள் அல்லது எண்ணப்படாத பின்விளைவுகள் இருக்கின்றனவா?

*விண்ணப்பதாரர்கள்*

14. கட்டாயத்திருமணத்திற்கான குடிமக்கள் பாதுகாப்பு கட்டளை ஒன்றிற்கு விண்ணப்பிக்கக்கூடிய கூடுதலான மக்கள் அல்லது நிறுவனங்கள் ஏதேனும் இருக்கின்றனவா? ஆம் எனில், யார், ஏன்?
15. பாதுகாப்பு கட்டளை ஒன்றிற்கு விண்ணப்பிப்பதற்கான திறனைக் குறிப்பிட்ட தனிப்பட்டோர் அல்லது நிறுவனங்களுக்குக் வழங்குவதில் ஆபத்துகள் இணைந்து உள்ளதா? அவ்வாறானால், இத்தகைய ஆபத்துக்கள் யாவை; எவ்வாறு அவற்றைக் குறைக்கலாம்?

*பிரதிவாதிகள்*

16. கட்டாயத்திருமண குடிமக்கள் பாதுகாப்புகளுக்கு யார் பிரதிவாதியாக இருக்கவேண்டுமென்பதில் ஏதேனும் வரம்புகள் இருக்கின்றனவா? அவ்வாறானால், எவ்வாறு அவை வரையறைசெய்யப்படவேண்டும் (உதாரணம்: குடும்ப அங்கத்தவர்கள் மாத்திரம்)?

*பாதிக்கப்பட்ட- உயிர்பிழைத்தவர் முகவர்*

17. கட்டளைகளைக் கைவிடுமாறு பாதிக்கப்பட்ட-உயிர்பிழைத்தோர் வற்புறுத்தப்படும் ஆபத்தினை எவ்வாறு நிவர்த்திசெய்வது?
18. கட்டாயத் திருமண விசாரணைகள் மற்றும் குடிமக்கள் பாதுகாப்பு (சிவில்) கட்டளைகளை வெளியிடுவதற்கான செயல்முறைக்குள் சிறுவர்கள் உட்பட, பாதிக்கப்பட்ட- உயிர்பிழைத்தோரின் கருத்துகளை எவ்வாறு சிறந்த முறையில் தேடி இணைக்கலாம்?

*சட்ட நடவடிக்கைகள் ஊடாக நீதிமன்ற பாதுகாப்புகளும், உதவியும்.*

19. சிறுவர்கள் உட்பட, குடிமக்கள் பாதுகாப்பு கட்டளை விண்ணப்ப செயல்முறை ஊடாக உதவுவதற்கு, கட்டாயத்திருமணத்தில் அல்லது அதன் ஆபத்தில் இருக்கும் மக்களுக்கு, வேறு எவ்வித ஆதரவுகள் கட்டாயமாகக் கிடைக்கவேண்டும்? உதாரணமாக, விண்ணப்ப நடைமுறை அல்லது மேலதிக நீதிமன்ற பாதுகாப்பு ஊடாக மேலதிக ஆதரவுகள்

*இடைக்கால கட்டளைகள் மற்றும் ஒருதரப்பினர் வழக்குவிசாரணைகள்*

20. கட்டாயத்திருமணத்தில் அல்லது அதன் ஆபத்தில் ஒருவர் இருக்கும்போது, இடைக்கால கட்டளையைப் பிறப்பிப்பதற்கு எவ்வித காரணங்கள் பொருத்தமாகும்?

21. முன்மொழியப்பட்ட கட்டளைகளின் நோக்கம் சிலவற்றை, ஆனால் முழுவதுமல்ல, உள்ளடக்குவதற்கு இடைக்கால கட்டளைகள் மட்டுப்படுத்தப்பட வேண்டுமா (கட்டளைகளின் நோக்கத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது)? அவ்வாறானால், எத்தகைய பாதுகாப்புகள் சேர்க்கப்படவேண்டும் அல்லது விலக்கப்படவேண்டும் அத்துடன் ஏன்?

22. கட்டாயத்திருமணத்தில் அல்லது அதன் அபாயத்தில் ஒருவர் இருக்கும் வேளையில், இடைக்கால கட்டளை ஒன்றிற்காக காரணங்களைக் கவனித்தில் கொள்ளும்போது கட்டாயத்திருமணதின் ஆபத்தை என்னவகையான சான்றுகள் சுட்டிக்காட்டலாம் அத்துடன் காவல்துறையால் கருதப்படலாம்?

*சேவை,* அமுலாக்கல் *மற்றும் முறிவு*

23. கட்டளைகள் தனிப்பட்ட முறையில் கையளிக்கப்படத்தேவைப்படாத ஏதேனும் சந்தர்பங்கள் இருக்கின்றனவா (உதாரணமாக இலத்திரனியல் சேவையூடாக)? அவ்வாறானால், அத்தகைய சந்தர்ப்பங்கள் யாவை?

*பிற பரிகாரங்கள்*

24. குடிமக்கள் (சிவில்) பாதுகாப்புகளுக்கு மேலாக, கட்டாயத்திருமணத்தில் அல்லது அதன் ஆபத்தில் இருக்கும் மக்களுக்கு கவனிக்கப்படவேண்டிய பரிகாரம் இருக்கிறதா?

25. தற்போது, பாதிக்கப்பட்ட- உயிர்பிழைத்தோரின் கட்டாயத்திருமணம் தொடர்பாக, செல்லுபடியற்றதாக்கும் பிரகடனம் ஒன்றினைக் கேட்கும்போது, அவர்கள் தடைகள் அல்லது சிரமங்களை எதிர்நோக்குகிறார்களா? ஆம் எனில், இத்தகைய தடைகள் அல்லது சிரமங்கள் எவ்வாறு நிவர்த்திசெய்யப்படலாம்?

*ஆபத்துக் காரணிகள்* மற்றும் *ஆதரவு* தேடுவதில் தடைகள்

26. கட்டாயத்திருமணத்தில் அல்லது அதன் ஆபத்தில் இருக்கும் மக்கள் ஆதரவு தேடுவதில் இருக்கும் ஆபத்துகள் மற்றும் தடைகள் என்ன? இவற்றை நிவர்த்திசெய்ய எவ்வித உபாயங்களைக் கருத்தில்கொள்ளலாம்?

27. ஒருவர் சட்ட அமைப்பினூடாகப் பாதுகாப்பை நாடினால், அவர் எவ்வித ஆபத்துகள் மற்றும் தடைகளைச் சந்திக்க நேரிடலாம்? எவ்வாறு இதற்கான தண்டனையைக் குறைக்கலாம்?

28. ஆதரவுசேவை மற்றும் சட்டஅமைப்புகளுடன் ஈடுபடுவது, கட்டாயத்திருமணத்தை எதிர் நோக்கும் ஆட்களுக்கு ஆபத்தை அதிகரிக்கும். ஒரு நபர் கட்டாயத்திருமணத்தின் ஆபத்தில் இருக்கும்போது, முன்னரங்க பதிலளிப்போர் அல்லது சட்ட சேவைகள் போன்றவற்றால் பொறுப்பேற்கக்கூடாத வேறு ஏதாவது செயல்கள் உள்ளனவா?

*சிறுவர்களுக்கு ஆதரவளித்தல்*

29. முன்மொழியப்பட்ட சட்ட பாதுகாப்புகளை அணுகுவதற்கும் மற்றும் விண்ணப்பங்கள், , நீதிமன்று மற்றும் வேறு சட்ட நடைமுறைகளூடாக

சிறுவர்களுக்கு உதவுவதற்கும் எவ்வித மேலதிக ஆதரவுகள் மற்றும் பாதுகாப்புகள் ஆலோசிக்கப்படலாம்?